பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 | ஐப்பசி 28 | முஹர்றம் 4 | இதழ் 274

யாழ்ப்பாண | வியாழக்கிழமை | 13 - 11 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980-11-1
PERIODICALS
DIVISION

## சபையில் சிந்தியவை

திரு. மெரில் காரியவசாம் (அகலவத்தை எம். பி.): சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட எடுத்த நடவடிக்கைகளின் போதே சோமபாலா இறந்தார்.

திரு. ஆர். பி. விஜயசிறி (ஹரிபத்துவ 2வது எம். பி): இதுதான் தார்மீகமா?

திரு. மெரில் காரியவாசம்; உறுப்பினருடன் கையால் பேச நான் விரும்பவில்லை.

திரு. விஜயசிறி: நான் அதற்குத்தயார். வெளியே வாருங்கள். (கைக்கடிகாரத்தை கழற்றுகிறார்).

மெரில்: யாருக்குப் பிறந்தவர் என்பது தெரியாத ஒருவருடன் பேச விரும்பவில்லை.

திரு. விஜயசிறி; உம்முடைய (அகலவத்தை உறுப்பினரின்) அப்பா யார் என்று உமக்குத் தெரியுமா? அம்மா சொல்லித்தந்தாரா?

பிரதி சபாநாயகர்: ஒழுங்கு....ஒழுங்கு.... இந்தப் பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

# எழுபது ரூபா சம்பள உயர்வு

# இம்மாதம் முதல்!

## 'ரெனி' மனமாற்றம்



(கொழும்பு)

நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரெனி டி மெல் தமது வரவு - செலவுத் திட்டத்தில் அறிவித்திருந்த எழுபது ரூபா சம்பள உயர்வு இம்மாதம் முதலே வழங்கப்படும்!

இது பற்றிய அறிவிப்பை நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் வெளியிட்ட நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரெனி டி மெல்; சகல அரசாங்க ஊழியர்களுக்கும் மேலதிகமாக எழுபது ரூபா சம்பள உயர்வு வழங்குவதன் மூலம் அரசாங்கத்துக்கு ஆண்டுதோறும் எழுபது கோடி ரூபா தேவைப்படுகிறது என்று கூறினார்.

கடந்த ஐந்தாம் திகதி தமது நான்காவது வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த நிதி, திட்டமிடல் அமைச்சர் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதல் எழுபது ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார். ஆனாலும் தாமத சம்பள உயர்வுகுறித்து எழுப்பப்பட்ட கண்டனங்களை தொடர்ந்து நிதி அமைச்சர் தமது யோசனையை மாற்றி, உடனடியாகவே சம்பள உயர்வு வழங்க முடிவு செய்திருப்பதாக கூறப்பட்டது.

இச்சம்பள உயர்வு, தனியார் துறையினருக்கும் உடன் வழங்கப்படவேண்டும் என்றும் இதற்கமைய சட்ட மூலம் கொண்டு வரவேண்டும் என்றும் தொழில் அமைச்சர் காப்டன் செனிவரத்தின கருத்துத் தெரிவித்துள்ளார்.

## பஸ், ரயில் சீசன் கழிவு மேலும் அதிகரிப்பு!

### போக்குவரத்து அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

பஸ், ரயில் பிரயாணிகளுக்கான மாதாந்த சீசன் டிக்கட்டுகளுக்கு வழங்கப்படும் கழிவை மேலும் அதிகரிப்பதென அரசு முடிவுசெய்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமது நேற்று பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையொன்றில் இதனை வெளியிட்டார்.

பஸ் பிரயாணிகளுக்கான சீசன்களுக்கு வழங்கப்பட்டிருந்த 25 வீத கழிவை 35 வீதமாக அதிகரிப்பதென்றும் ரயில் சீசன்டிகளுக்கானகழிவை 50 வீதத்திலிருந்து 60 வீதமாக அதிகரிப்பதென்றும் அமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்தார்.

இந்தக் கழிவு அதிகரிப்பின் மூலம் சீசன் டிக்கட் பெறுவோர் பயனடைவார்கள்.

(ம-கு)

## "கலவரத்தின்போது இராணுவத்தினரால் சுடப்பட்டு என் கணவர் இறந்ததாக தகவல் கிடைத்தது"

### சார்ஜன் அன்ரன் கொலை வழக்கில் மனைவி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"என் கணவர் பிள்ளைகளுக்குச் சாப்பாடு வாங்குவதற்காக சம்பதினம் சென்றார். அவர் பின் வீடுதிரும்பவில்லை. ஒரு கலவரத்தின்போது, என் கணவர் இராணுவத்தினரால் சுடப்பட்டு இறந்து விட்டார் என்ற தகவல் நள்ளிரவு 1 மணிக்கு கிடைத்தது."

பொலிஸ் சார்ஜன் அன்ரன் கொலை வழக்கு விசாரணையில் இறந்தவரின் மனைவியான திருமதி புலோரன்ஸ் அரியமலர் அன்ரன் அழுதுகொண்டு சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு கூறினார்,

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

திருமதி அரியமலர் அன்ரன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: இறந்தவர் என் கணவர். சம்பவம் நடந்த நாளில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினார். அந்த நேரம் நாங்கள், பண்ணையில் உள்ள அரசினால் தரப்பட்ட வீட்டில் வசித்துவந்தோம்.

எனக்கு 3 மகன்கள் உண்டு, மூத்தவருக்கு 15வயது மற்றவருக்கு 11 வயது. இளையவருக்கு 8 வயது எனக்கு சம்பவதினம் ஞாபகமிருக்கிறது.

அன்று என் கணவர் கடமை முடிந்து 6-45 மணிக்கு வீட்டிற்கு வந்தார். சீருடையை மாற்றிவிட்டு, உடை அணிந்

(8ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் குறுகிய நேர லீவு!

(கொழும்பு)

வீட்டுத்தேவைக்குப் பயன்படுத்தப்படும் மின் கட்டணங்களில் சலுகை வழங்குவதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

200 யுனிற்றுகளுக்கு குறைவாகப் பயன்படுத்தும் வீட்டுப் பாவனையாளர்களுக்கு மேலதிக எரிபொருள் கட்டணத்தை பெறுவதில்லை என்று நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுவந்த மாதாந்த குறுகிய நேர லீவை மீண்டும் வழங்குவதென்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. மாதாந்தம் ஒன்றரை மணித்தியாலங்கள் குறுகிய நேர லீவை எடுக்க அனுமதியளிக்கப்படும்.

(கு)

## சரக்குரயில்வண்டி தடம்புரண்டது!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிவந்த சரக்கு ரயில்வண்டி, புளியங்குளத்துக்கும் மாங்குளத்துக்குமிடையே தடம்புரண்டதில் ரயில் சேவைகள் நேற்று பாதிக்கப்பட்டன.

கொழும்பிலிருந்து வரும் வழியில் புளியங்குளத்திலிருந்து மாங்குளம் நோக்கிப் புறப்பட்ட சரக்குரயில் நேற்று அதிகாலை இரு ரயில் நிலையங்களுக்குமிடையில் தடம்புரண்டதில் ரயிலின் எண்ணெய்த் தாங்கி ஒன்று தடம்புரண்டது. இதன் காரணமாக நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட இரவு தபால் ரயில் நேற்று மாலை 4 மணியளவில்தான் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. அதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக் காலை, நண்பகல், புறப்பட்ட கடுகதி ரயில்கள் மாங்குளத்திற்கு அப்பால் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. இதேமாதிரி கொழும்பிலிருந்து வந்த ரயில்களும் புளியங்குளத்தில் நிறுத்தப்பட்டன. பிரயாணிகள் புளியங்குளம் மாங்குளத்துக்குமிடையே பஸ்ஸில் கொண்டு செல்லப்பட்டனர்.

ஆனாலும், நேற்று இரவு முதல் ரயில் சேவைகள் பூரவும் வழமையாகின.

## கூட்டணியின் தீர்மானத்தை விமர்சிப்பது தமிழ்மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்

### லண்டன் அரசியல் பிரமுகர் 'அமிரு'க்குக் கடிதம்

(கொழும்பு)

"மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணி ஏகமனதாக எடுத்துள்ள தீர்மானத்தை விமர்சிப்பது; தமிழ்ப்பேசும் மக்களுக்குச் செய்யும் படுதுரோகமாகும்" என்று லண்டன் தமிழர் இணைப்புக் கழக சரேஷ்ட அரசியல் பிரமுகர் டாக்டர்எஸ். ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு டாக்டர் ஸ்ரீனிவாசன் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்ட கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதம் மேலும் கூறுவதாவது:-

"மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தொடர்பாக லண்டனில் விவாதிக்கப்பட்ட போது, திரு. கே. வைகுந்தவாசனிடம்நான் தெளிவாக விளக்கியிருந்தேன். மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மசோதா இப்பொழுது சட்டமூலமாகி விட்டதென்றும், இச்சட்ட மூலத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொண்டுள்ளதென்றும், இதுபற்றி மேற்கொண்டு இங்கு விவாதிப்பது, விமர்சிப்பது ஈழத்தமிழரையே இழிவுபடுத்தும் செயலாக இருக்குமென்றும் திரு வைகுந்தவாசனிடம் தெரிவித்திருந்தேன்.

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியம், தமிழீழ விடுதலையாகும். விடுதலைப் போராட்டத்தில் உடனடியாக இறங்கமுடியாவிட்டாலும், சுதந்திர தமிழீழத்தை அடையதொடர்ந்தும் கூட்டணி முயலவேண்டும் ஆறுயிரம் மைல்களுக்கு அப்பால்நாம்இங்கு இருந்து கொண்டு, தமிழர்விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளை விமர்சிப்பது பண்பான செயலாகத் தெரியவில்லை. ஒருவரை ஒருவர் விமர்சிப்பதை மறந்து, வேற்றுமைகளைத் துறந்து தமிழர் விடுதலைக் கூட்டணிதனது இலட்சியப் பாதையில் முன்னேற உலகம்வாழ் தமிழர் ஆதரவு அளிக்க வேண்டும். தமிழீழ இலட்சியத்தை நாமடைய முயற்சிக்க வேண்டும்"

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடையே போதிய ஒற்றுமை இல்லை. வீணை வதந்திகளுக்குப் பலியாகிக் கொண்டிருப்பதை வெளிநாட்டுத் தமிழர்கள் தவிர்த்து; கூட்டணியின் வெற்றிக்கு துணை நிற்போம்" என்று டாக்டர் ஸ்ரீனிவாசன் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

முட்டைகளுக்கென தெரிவுசெய்யப்பட்ட உயர்ந்தஇன சிவப்பு முட்டையிடும் சறுப்பு 1½மாத பேட்டுச் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. K. அழகராஜா, றிம்மி கோழிப்பண்ணை, 30/1, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 7326

இல: 2 பி.ஏ. தம்பி ஒழுங்கை வளவில் வளர்ப்புக்கு ஏறிநாம்பன்கண்டு விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். சிவநாதன், வண்ணார் பண்ணை. 7339

புதிய இசுசு லொறிச் செசி இவ்வார எல்லையில் தரக்கூடிய நிலையில் உள்ளது. தொடர்பு கொள்க. 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 608, 7323

## தேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசதியான வீடு வாடகைக்குத் தேவை. தனி வீடு விரும்பத்தக்கது. இடம், வாடகை, முற்பணம் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். டி. சாமுவேல், திருப்பதி ஹோட்டல், தாவடிச் சந்தி, கொக்குவில். 7313

## WANTED

Wanted for Jaffna Office Lady Stenographer English Good knowlecge of English essential. 2 years experience preferred. Apply advt: No: 7324, C/o, Eelanadu Ltd, Jaffna. 7324

மல்லாகம் கிராமசபை

## கேள்வி விளம்பரம் 1981

மல்லாகம் நீதிமன்ற வீதியிலுள்ள ஆட்டிறைச்சிக்கடையில் 01-01-1981 முதல் 31-12-1981 வரையிலான காலட்பகுதிக்கு ஆட்டிறைச்சி வியாபாரம் செய்யும் குத்தகைச்கான கேள்விகள் 26-11-1980 புதன்கிழமை பிற்பகல் 1-30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் பிணைப் பணமாக ரூபா 50/ம், கேள்விப் பத்திரப்பணமாக ரூபா 10/-ம் செலுத்தி 25-11-1980 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. இதர விபரங்களை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ச. கி. திருநாவுக்கரசு,
விசேட ஆணையாளர்,
கிராமசபை
மல்லாகம்:

கிராமசபை அலுவலகம்,
மல்லாகம்,
05-11-1980. 7335

இ. மரியாம்பிள்ளை.
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றத்தில்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த காலஞ்சென்ற இம்மானுவல் யோசேப் சேவியர் என்பவரின் மரணசாதன மற்ற மரணச்சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்
— மரணமெய்தியவர்

மரணச்சொத்து
நியாயாதிக்கம் இல: 27/T

இம்மானுவல் யோசேப் சேவியர் கைம்பெண் அக்னேஸ் விமலா,
''பீற்றர் மவுன்ற்'',
கிழக்குத் தெரு,
ஊர்காவற்றுறை.
— மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்கள்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்

தயாரித்தது:
இ. மரியாம்பிள்ளை,
மனுதாரின் பதிவுபெற்ற
தரணி. 7333

வலி - கிழக்குத் தென்பகுதி
ப. நோ. கூ. சங்கம்

## கேள்வி விண்ணப்பம்

## இசுசு லொறி பொடி அடித்தல்

மேற்படி பொடி அடித்தலுக்கான கேள்வி விண்ணப்பப் படிவத்தை 18 - 11 - 1980-ம் திகதிக்கு முன் பெற்று 25-11-1980-ம் திகதிக்கு முன்னர் ''பொதுமுகாமையாளர், வலி-கிழக்குத் தென்பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பொடி அடித்தல்' எனக் குறித்து பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கலாம்.

பொதுமுகாமையாளர்,
நீர்வேலி,
11-11-1980. 7337

## அந்தியேட்டி அழைப்பு

அமரர்
நா. சங்கரநாதன்

அன்புடையீர்!

சென்ற புரட்டாதி மாதம் 29-ம் திகதி (15-10-1980) இறைவனடி சேர்ந்த புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூரைச்சேர்ந்த இளைப்பாறிய பிரதம சிருப்பர் (திறைசேரி) நா. சங்கரநாதன் அவர்களின் ஆத்மசாந்திக்காக நிகழும் ரௌத்திரி வருடம் ஐப்பசி மாதம் 29-ம் திகதி (14-11-80) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் 2 மணிக்கும்இடையில் அவர்களது இல்லத்தில் புண்ணிய தானம் நடைபெறும். அன்று நடைபெறும் சகல வைபவங்களிலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதத்துடன் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
அருளம்மா(மனைவி), இந்துமதி(மகள்), இரகுபதி(மருமகன்), விஜயகுமார்(மகன்), வனஜா (மகள்), க. மார்க்கண்டு (துரை, மைத்துனன்), நா. சண்முகம் (மாமனார்.) 7329

## வரணியின் இழப்பு

அமரர் அம்பலவாணர் நடராசாவின் மறைவு ஈடு செய்ய முடியாதது. சைவமும், தமிழும் கமழும் வரணிக் கிராமத்தில், தமிழ்ப்பண்பாட்டோடு ஒன்றிணைந்த குடும்பத்தில் உதித்த நடராசா காட்சிக்கு இனியவர், கிராமசேவையாளராகத் தனது மேலதிகாரிகளின் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமாகிக் கடமை புரிந்தவர். சமூகசேவையே தனது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். தனது வாழ்நாளில் வரணிக் கிராமத்தில் நலன்களுக்காக அரும்பாடுபட்டு உழைத்த உத்தமன்.

வரணி—குடத்தனை வீதியை அமைப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகள் சொல்லில் அடங்கா, அவ்வீதி வழியாக பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கும் வரணிக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கவும் அவர் ஏற்பாடு மேற்கொண்டுள்ள வேளையில் அவரது மறைவு பருநஷ்டமாகும்.

வருட வருடம் அவர் முன்னின்று நடத்தும் கலை விழா இந்திர விழாவிலேயே காட்சி பளிக்கும்.

அவரது மறைவு குறித்து வரணிக்கிராமத்தின் பெரியார் வேலுப்பிள்ளை உபாத்தியார் ''வரணி வள்ளலும் மறைந்தனரே'' என்று கூறியது இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அறிவும், ஆற்றலும் இனிய இயல்பும் ஈகைப்பண்பும் எவர்க்கும் அஞ்சா நெஞ்சும் உடையவர் அவரது மறைவு குடும்பத்தினருக்கும் வரணிக்கிராமத்தினருக்கும் மட்டுமல்ல என் போன்ற நண்பர்களுக்கும் பேரிழப்பாகும்.

## போக்குவரத்துக் கஷ்டம்

(அனலைதீவு)

நயினாதீவு அனலைதீவு, எழுவைதீவுப்பகுதிகளில் சேவையில் ஈடுபட்டுவந்த அரசாங்கத்துக்குச் சொந்தமான 'அலை அரசி' படகுச்சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் சொல்லொண்ணுக் கஷ்டம் அனுபவித்து வருகின்றனர்.

ஊர்காவற்றுறையிலிருந்து காலை 7-45 மணிக்குப் புறப்பட்ட ''அலைஅரசி'' மூலம் பெருமளவில் நன்மை அடைந்துவந்த மக்கள் தற்போது தனியார் சேவைகள் சீராக நடைபெறுததால் கஷ்டப்படுகின்றனர்.

## TENDER NOTICE

Tenders for the improvements to the existing building to house the Ice Factory for the Northern Province Fishermen's Co-operative Societies Union Ltd. at No. 18, First Cross Street, Jaffna, are hereby invited from Registered Contractors registered for works costing Rs. 100,000 - and over.

Tenders must be made on form available with the President, N. P. F. C. S. Union Ltd up to 12 noon on the 20th day of November 1980.

A non-refundable deposit of Rs. 25 - (Twenty five) will be required to be paid at the Union's Office at No, 25, Front Steet, Jaffna and the receipt produced for obtaining Tender Forms.

President
NORTHERN PROVINCE
FISHERMEN'S CO-OP., SOCS. UNION LTD.
No. 25, Front Street.
Jaffna, 7340

## விளம்பரம்

01-01-81 தொடக்கம் 31-12-81 வரையான காலப் பகுதிக்கு மல்லாகம் சந்தை, அளவெட்டி வடக்குச் சந்தை, அளவெட்டி தெற்குப் புதிய சந்தை, முதலியவற்றின் குத்தகை உரிமை அந்தந்த சந்தைகளில் ஏலத்தில் கீழே கூறப்படும் நிபந்தனைகளுக்கமைய விற்கப்படும்.

ஏலத்தில் பங்கு பற்ற விரும்புவோர் பிணைப்பணமாக ரூபா 25/- அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்ற பின்பே ஏலத்தில் பங்கு பற்றலாம்.

கூடிய கேள்விக்காரருக்கே குத்தகை கொடுக்கப்படும். குத்தகை பெற்றவர் கேள்வித்தொகையில் 1/3ஐ அறிவித்தல் கிடைத்த ஏழு நாட்களுக்குள் செலுத்த வேண்டும். மிகுதியை மூன்று தவணைகளில் மூன்று சம பங்குகளாகச் செலுத்தவேண்டும். அன்றியும் சபையுடன் ஓர் குத்தகை ஒப்பந்தமும் 30-12-80க்கு முன்பாகச் செய்தல் வேண்டும்.

சந்தையில் மீன், மரக்கறி விற்போரிடமிருந்து குத்தகையாளர் வசூலிக்கும் தொகை ஏலம் நடைபெறும் தினத்தில் சபை உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்படும். இதர விபரங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| சந்தை | காலம் | நேரம் |
|---|---|---|
| மல்லாகம் | 26-11-80 | காலை 9-30 மணி |
| அளவெட்டி வடக்கு இருல் மடச் சந்தை | 26-11-80 | காலை 10-30 மணி |
| அளவெட்டி தெற்கு புதிய சந்தை | 26-11-80 | காலை 11-30 மணி |

ச. கி. திருநாவுக்கரசு,
விசேட ஆணையாளர்,
கிராமசபை,
மல்லாகம்.

கிராமசபை அலுவலகர்,
மல்லாகம்,
05-11-80. 7336

## மரண அறிவித்தல்

### தியாகராசபிள்ளை தெய்வானைப்பிள்ளை

வட்டுக்கோட்டை மேற்கு இளைப்பாறிய கல்லூரி அதிபர் க. தியாகராசபிள்ளையின் அன்புமனைவியும், பொறியியலாளர் ஸ்கந்தராசாவின் அருமைத் தாயாரும், ஆசிரியை தங்கநாயகியின் அன்பு மாமியும், சயந்தன், சுஜித்தாவின் அன்புப் பாட்டியுமான தெய்வானைப்பிள்ளை சிவபதம் சேர்ந்துவிட்டார். இவரின் ஈமக்கிரியைகள் இன்று (13-11-80) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெறும். 7332

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் ஒரே ஒரு குமிழ்முனைப் பேனை VINK
யாழ்ப்பாணத்தவர் பெருமைப்படவேண்டிய குமிழ்முனைப் பேனை VINK
யாழ்ப்பாணத்தவர் ஆதரிக்கவேண்டிய குமிழ்முனைப் பேனை VINK
VINK இப்பொழுது எங்கும் கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான்-ஈராக் யுத்தத்தை சமரசமாகத் தீர்க்கசுவீடன்மாஜிப்பிரதமர்முயற்சி

லண்டன் நவ. 12

ஈரான் - ஈராக் யுத்தத்தை சுவீடனின்முன்னுள் பிரதம மந்திரி மத்தியஸ்தராகக் கடமையாற்றி சமரசமாகதீர்த்து வைக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முயற்சியை இவர் அடுத்தவாரம் ஆரம்பிப்பாரென ஐ நா. தலைமையகம் அறிவித்துள்ளது.

ஈரான் - ஈராக் யுத்தத்தில் ஈரானின் நலனை மட்டும் ஆராய்வதாக விருந்தால் ஐ. நா. பொதுக்காரியதரிசியின் பிரதிநிதியொருவர் ஈரானுக்கு அனுப்பப்படலாமென அந் நாடு தெரிவித்துள்ளது.

ஈரானின் 'குசெஸ்தான், மாகாணத்தில் ஜனாதிபதி பாணி சத்தர் தலைமையில் கூடிய ஈரானிய பாதுகாப்புச் சபை இவ்வாறு தீர்மானித்ததாக் கூறப்படுகிறது.

ஈராக்கியத் துருப்புக்கள் ஈரான் எல்லையிலிருந்து வெளியேறும் வரை ஈரான் - ஈராக் யுத்தம் தொடர்பான சுமரசப் பேச்சுவார்த்தைகள் எதுவும் நடைபெறமாட்டாதென ஈரான் வலியுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பாரசீக வளைகுடாவின் கிழக்குக்கரை ஹார்மஸ் தீவு உட்பட்ட பகுதிகளில் ஈராக்கின் உரிமைகளை ஈரான் அங்கீகரித்தால் ஈரான் பிரதேசத்திலிருந்து தனது படைகளை வாபஸ் பெறப்போவதாகஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் கூறியுள்ளார்.

ஈரான் - ஈராக் யுத்தத்தை நிறுத்துவதற்கான சிலயோசனைகளை கியூபா வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் அபடான் மாகாணத்தில் ஈராக்கியப் படைகளை பல கிலோ மீட்டர் தூரம் பின்னோக்கி ஈரானிய படைகள் விரட்டியடித்ததாக ஈரான் அறிவித்துள்ளது.

ஈராக்கியப் படைகள் ஈரானின் எண்ணெய் உற்பத்தி நகரங்களை நோக்கிப்படிப்படியாக முன்னேறிச் செல்வதாக ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசைன் தெரிவித்துள்ளார்.

ஈராக் - ஈரான் யுத்தத்தை சமரசமாகத் தீர்த்து வைக்கும் முயற்சியில் அணிசேரா நாடுகள் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (வெ)

## சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

ஐப்பசிக் கடைசி வெள்ளி அன்று காலை 8 மணி தொடக்கம் கரணவாய் ஆதீனம் ஸ்ரீமத் கை. திருஞானசம்பந்தக குருக்கள் யாழ்ப்பாண சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் மாணவர்களுக்கும், பிறருக்கும் சமய தீட்சை செய்து வைப்பார். விரும்பியவர்கள் யாவரும் ஆசாரசீலர்களாக வந்து பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

## உறுதிகள் வழங்கப்படும்

(மன்னார்

மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோதமாக அரசாங்கக் காணிகளை ஆக்கிரமித்துள்ள 5474 பேருக்குக் காணிகளை சொந்தமாக்கும் முகமாக உறுதிகள் வழங்கப்படவிருக்கிறது

உறுதிகள் வழங்கும் திட்டம் முதலில் மாதா கிராமத்திலிருந்து ஆரம்பமாகும்.

## தமிழ் நாட்டில் தமிழ் பல்கலைக்கழகம்

சென்னை நவ 12

தமிழ்நாட்டில் தமிழ்ப் பல்கலைக்கழகமொன்று நிறுவப்படுமென்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இப் பல்கலைக்கழகத்தை அமைப்பது சம்பந்தமாக ஆலோசனைக் குழுவொன்றையும் தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

மதுரை காமராஜ் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் மாணிக்கம் இக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (வெ)

## அசாமில மக்கள் அரசு!

கௌகாத்தி நவ 12.

அடுத்தமாதம் அசாமில் மக்கள் அரசொன்று அமைக்கப் படுமென்று மந்திய உள்துறையமைச்சா திரு, ஸயில்சிங் கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அசாமில் ராஷ்டிரபதி ஆட்சியை ஒரு ஆண்டுக்கு மேல் நீடிக்க அரசியல் சாசனம் இடமளிக்கவில்லையென்றும்' அவர் கூறினர். தற்போது அசாமில் ராஷ்டிரபதி ஆட்சி நிலவி வருவது தெரிந்ததே, (வெ)

## சிமெந்துத் தொழிற்சாலை அசம்பாவிதம்:

# கூட்டுத்தாபனத் தலைவர் நேரில் விசாரணை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பாக ஆராய இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அசோகா சோமரத்தின திடீர் விஜயத்தை மேற்கொண்டுள்ளார் .வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. மகேந்திரனும் இது பற்றி நேரில் ஆராய்ந்தார்.

கடந்த 10-ம் திகதி இரவு 7 30 மணியளவில் காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலையிலிருந்து தொழிற்சாலை ஊழியர்கள் ஐவர் மின்சார வயர் பல்ப் போன்றவற்றை எடுத்துக் கொண்டு வெளியில் வேலை செய்யும பொருட்டு பிரதான வாயிலால் வெளியேற முயற்சித்தபோது அவ் வாயிலிலிருந்த பாதுகாவல் உத்தியோகத்தரான கே. டி. சோமபாலா என்பவர் அவர்களைப் பரிசோதித்ததாகவும் அச்சமயம் மேற்படி பொருட்களுக்கான அனுமதிப்பத்திரத்தில் முரண்பாடு இருந்ததாகவும் பொருட்கள் குறிக்கப் பட்டதைவிட அதிகமாக இருந்ததாகவும் அவரால் கண்டு பிடிக்கப்பட்டு தலைமைப் பாதுகாவல் அதிகாரி திரு அட்டிகலைக்கு இதுவிஷயமாக அறிவிக்கப்பட்டதாகவும் அவர் இதுபற்றி விசாரணை செய்த சமயம் சிறு அசம்பாவிதம் மூண்டதாகவும் கூறப்படுகிறது

அச்சமயம் தலைமைப் பாதுகாவல் அதிகாரி சிலரால் தாக்கப்பட்டதாகவும் பின்னர் வேறும் சிலர் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றிக் காங்கேசன் துறைப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்ததை அடுத்து பொலிசார் விரைந்து அசம்பாவிதத்தில் ஈடுபட்ட 15 க்கு மேற்பட்வர்களைக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இதுவிஷயம் கொழும்புக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிமெந்துக் கூட்டுத்தாபனத்தலைவர் திரு. அசோக சோமரத்தின தொழிற்சாலைக்குத் திடீர் விஜயம் செய்து இதுபற்றி விசாரணையிலீடுபட்டுள்ளார்.

வடபிராந்தியப் பொலிஸ்மா அதிபர் திரு. மகேந்திரனும் இதுபற்றி நேரில் பார்வையிட்டு விசாரணைகள் நடத்தியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணையை யாழ் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ராஜபக்ச பொறுப்பாக இருந்து நடத்துகிறார். காங்கேசன்துறைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு, பத்மதேவா உதவியாகக் கடமையாற்றுகிறார்.

அசம்பாவிதத்தில் ஈடுபட்டவர்களிடையே சமரசம் செய்து வைக்க முயற்சிகள் நடப்பதாக கூறப்படுகிறது.

தொழிற்சாலையில் பொலிசார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

## கன்னன்குடா—ஈச்சந்தீவு

# ப.நோ.கூ.ச. கட்டிடத்துக்கு ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கீடு

## பொது முகாமையாளர் கோரிக்கை: அமைச்சர் 'இராசு' ஒதுக்கீடு

(வவுணதீவு)

கன்னன்குடா — ஈச்சந்தீவு ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகக் கட்டிட நிர்மாணத்திற்கு மட்டக்களப்பு முதல்வரும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செ. இராசதுரை ஐந்து இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார். பிரஸ்தாப சங்கப் பொதுமுகாமையாளர் திரு. கந்தையா ஹீன்நிலமே அமைச்சரிடம் நேரில் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சங்க அலுவலகம் கடந்த சூருவளியினுல் தரைமட்டமான நிலையில் இன்றும்காணக் கூடியதாகவுள்ளது. கட்டிட நிர்மாணம் குறித்து அமைச்சர் ஒருவரை மேற்படி சங்கத்தின் பொதுமுகாமையாளர் சந்தித்து கோரிக்கை விடுத்ததும் இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதும் இச் சங்க வரலாற்றில் இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மாடிக்கட்டிடத்திற்கானஅத்திவாரக் கல்லை அமைச்சரைக் கொண்டே நாட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

## தென்னுபிரிக்கா மீது பொருளாதாரத் தடை

நியூயோர்க் நவ 12,

இன ஒதுக்கலுக்கு எதிரான ஐ. நா. கமிட்டி தென்னுபிரிக்காவிற்கு எதிராக முழு அளவிலான பொருளாதாரத்தடைகள் விதிக்கப்படவேண்டுமென்று உலகநாடுகளைக் கேட்டுள்ளது.

இன ஒதுக்கல் சம்பந்தமாக ஐ. நா, பொதுச்சபையில் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றிய இக் கமிட்டியின் தலைவர் கூறியதாவது தென்னுபிரிக்காவின் நியாயமான விடுதலைப் போராட்டத்திற்கு உதவுவதற்கு சிறந்த வழி அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது தன் என்றுர். (வெ)

# இளம் பணிப்பெண் ஏமாற்றப்பட்டாரா?

## வீட்டு எஜமானின் மகனை பொலிஸார் தேடுகின்றனர்

(பண்டத்தரிப்பு)

வீடு ஒன்றில் பணிப்பெண்ணுகக் கடமையாற்றிய 18 வயது இளம் பெண் தமது எஜமானரின் மகன் தம்மைத் திருமணம் செய்வதாக வாக்குறுதியளித்து உறவுகொண்டதைத்தொடர்ந்து தான் கர்ப்பிணியாகிவிட்டதாகவும், வீட்டுக்காரர்கள் தம்மை வீட்டைவிட்டு துரத்திவிட்டதாகவும் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்துள்ளார்.

மலையகப் பகுதியைச்சேர்ந்த ராமு தனலெட்சுமி என்னும் மேற்படி 18 வயதுப் பணிப்பெண் தமது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது: 'மலைநாட்டைச் சேர்ந்த நான் சிறு வயது தொடக்கம் மானிப்பாயிலுள்ள வீடு ஒன் ஒன்றில் பணிப்பெண்ணுக வேலைசெய்துவருகிறேன். வீட்டு எஜமானரின் மகனுன தயாபரன் என்பவர் என்னை தான் திருமணம் செய்வதாக வாக்குறுதி அளித்ததை அடுத்து இருவரும்உறவுகொண்டோம். இப்போது நான் ஆறு மாதக் கர்ப்பிணியாக இருக்கிறேன், இதை அறிந்து வீட்டுக்காரர்கள் என்னை வீட்டைவிட்டு வெளியேற்றிவிட்டார்கள். எனக்குஆதரவளிப்பார் யாரும் இல்லை. இதுபற்றி விசாரணை நடாத்தி நீதி கிடைக்கச்செய்யுங்கள்.'

இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். பிரஸ்தாப வீட்டு எஜமானின் மகன் தலைமறைவாகியுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்,

## தேசிய ஒருமைப்பாட்டு கமிட்டிக் கூட்டம்

புதுடில்லி நவ 12.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்திய தேசிய ஒருமைப் பாட்டுக் கமிட்டியின் முதலாவது கூட்டம் புதுடில்லியில் நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

இக் கூட்டத்தை இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி ஆரம்பித்து வைப்பார். மாநில முதலமைச்சர்களும், ஜனதா கட்சி, பாரதிய ஜனதாகட்சி, தேவராஜ் 'அர்ஸ் காங்கிரஸ் பிரதிநிதிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்களெனக் கூறப்படுகிறது.

இக்கட்சிகள் முன்னர் இக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லையெனத் தீர்மானித்திருந்தன. தேசிய ஒருமைப்பாட்டுக் கமிட்டியுடன் ஒத்துழைப்பதாக இந்திய இடது சாரிக் கட்சிகள் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. லோக்தாகட்சி மட்டுமே இக் கூட்டத்தைப் பகிஷ்கரிப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாட்டில் வகுப்பு ஒற்றுமையைப் பேணிப்பாதுகாப்பது, வடக்குகிழக்குப் பிராந்திய நிலைமை ஆகிய விடயங்கள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (வெ)

# வெளியேற்றம்: முன்னரே எதிர்பார்த்த காரியம்

## ஈழவேந்தன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''தமிழர் கூட்டணியின் பொதுச்சபை உறுப்புரிமை இருந்தும், மத்திய செயற்குழுவிலிருந்தும், கொழும்புக் கிளை தலைமைப் பதவியிலிருந்தும், கட்சியின் சாதாரண உறுப்புரிமையிலிருந்தும் என்னை விலக்கியிருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல. எப்பொழுதோ பெருமளவில் எதிர்பார்க்கப்பட்ட காரியம் இப்போது நடந்துள்ளது. அரசியல் வரலாற்றில் இது ஒரு புதுமையான நிகழ்ச்சியில்லை. அத்துடன் முதலாவது நிகழ்ச்சியுமில்லை.''

இவ்வாறு தமிழர் கூட்டணியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள ஈழவேந்தன் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழவேந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''ஐக்கியதேசியக் கட்சியுடன் ஒன்றுபட்டு பிரதம மந்திரியுடனும் அமைச்சர்களுடனும் தமிழர் கூட்டணியினர் தோழமை நடத்திக்கொண்டிருக்கும் இவ்வேளையிலும்கூட தமிழ்ராஜ்யம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஆளும் கட்சியினர் கூறிக் கொண்டிருக்கிறுர்கள். வேண்டுமானுல் கிராமராஜ்யம் பற்றிப் பேசுங்கள் என்ற நிலையில்தான் ஆளும்கட்சி அவர்களுடன் தோழமை நடத்துகிறது. அப்படியிருந்தும் தமிழர் கூட்டணி எம். பி.க்கள் அவர்களுடன் இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் நிலையிலிருந்துதிரும்பவில்லை. இது பாராளுமன்ற ஆசனங்களில் இவர்களுக்குள்ள ஆசையைக் காட்டவில்லையா? இவ்வித ஆசைகளிலிருந்து நாம் எப்போது விடுபடுகிறேமோ அப்பொழுதுதான் எமது தமிழ் ஈழ இலட்சியத்தைப் பெறமுடியும். இந்த வகையில் நான் எனது நிலையிலிருந்து தவற மாட்டேன். தமிழ் ஈழ இலட்சியம் ஈடேறும்வரை உழைப்பேன்.''

## திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். திருவண்ணைநகர் அருள்மிகு செந்தில்கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்தர் ஷஷ்டித் திருவிழாவில் இன்றிரவு 7-00 மணிக்கு வித்துவான் சி. குமாரசாமி ''உருவாய் அருவாய்'' என்னும் பொருள் பற்றி சிறப்புச்சொற்பொழிவாற்றுவார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

தாயே நான் பிராம் மணன், அவர்கள் தாழ்ந்தவர், பறையர் என்பன போன்ற கருத்துக்களையெல்லாம் என்னிடத்து இல்லாது அழித்து விடுவாயாக. ஏனெனில் தாழ்ந்தவர் பறையர் எனப்படும் அவர்களும் பல்வேறு ரூபங்களில் உள்ள நீயே அன்றி வேறு யாவர்?

— ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## தக்கோர் குணம் கொடை

'நிலநன்மையினாலே தண்ணீருக்கும், கொடையினாலே நல்லோருக்கும், அருளினாலே கண்களுக்கும், கற்பினாலே பெண்களுக்கும் பெருமை உண்டாகும்' என்கிறார் ஔவைப்பிராட்டி.

கொடையினாலே நல்லோருக்குப் பெருமை உண்டு என்பதற்கு ஒரு அரிய உதாரணத்தைப் பெருமகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றோம்.

யாழ்ப்பணத்தில் நிறுவப்படவுள்ள புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு சுமார் ஐந்து இலட்சம் ரூபாவை நன்கொடையாக அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் மகன் திரு. குமார் பொன்னம்பலம் கொடுத்து உதவியுள்ளார் என்ற நற்செய்தியே நாம் குறிப்பிட்ட உதாரணம்.

தக்கபணிக்குத் தாராளமான நிதிஉதவி தகுந்த நேரத்தில் கிடைத்துள்ளது. இதுவே எமக்கு முதலில் பட்ட உணர்வு. அதைவிட இக்கொடை நாட்டின் பிரபல சட்டஞானியும், அரசியல் ஞானியுமான அமரர் பொன்னம்பலத்தை நாட்டு மக்கள், சிறப்பாக யாழ்ப்பாணமக்கள் என்றும் நினைவுகூர உதவுவதாகும்.

தலைவர்களுக்கு நினைவுச் சின்னம் என்றால் வெங்கலச்சிலையும், மணிமண்டபமும் என்பதே சாதாரண மக்களின் கருத்தாகும். அரசியல் வாதிகளும் அக்கருத்தையே ஆதரிக்கின்றனர் அதில் ஒருபொல்லாப்புமில்லை ஆயினும் தேவாலயம், வித்தியாலயம் மருத்துவமனை போன்ற ஸ்தாபனங்கள் ஞாபகச் சின்னமாக அமைவதானால் அவற்றின் பெருமை என்னே?

யாழ்ப்பாணத்தின் நெடுங்காலத்தேவை ஒரு புற்று நோய் ஆஸ்பத்திரி என்று வாய்கிழியக் கத்தி, பக்கம் பக்கமாய் எழுதி படாதபாடெல்லாம் பட்டவர்களுள் முன்னின்றவர் அமரர் டாக்டர் கனகரத்தினம் என்றும் மரணத்தை எதிர்பார்த்திருந்த அப்பெரியார் சடுதியாக மறையமுன்னரே தாம் எடுத்த பணி, தாமதித்தாலும் நிறைவேறுகின்றதென்ற நம்பிக்கை ஒளி அவரின் ஆத்மாவிற்குச் சாந்தி அளிக்கும்.

அதற்கு அடுத்தாற்போல் நிறுவப்படவுள்ள புற்று நோய் ஆஸ்பத்திரி பரோபகாரிகளின் உதவியின்றி உருவாகுமென்பதை அரசின் இன்றைய நெருக்கடியில் எதிர்பார்க்கக் கூடியதன்று.

டிரவிவரும் இப்பயங்கர நோயால் பீடிக்கப்படும் நோயாளிகள் படும் மரண வேதனைக்கு உடனடி ஆறுதல் அளிக்கும் மருத்துவமனை துரிதமாக நிறுவப்பட வேண்டுமென்பதைக் கொடைவள்ளல்கள் அனைவரும் மனதிற்கொள்ள வேண்டும்.

இந்தப்பின்னணியில் திரு. குமார் பொன்னம்பலத்தின் அரும் பெருஞ்சாதனை, மகன் தந்தைக்காற்றும் உதவியாக அமைகிறது, தந்தை மகற்காற்றும் உதவி நன்கு நிறைவேற்றப்பட்டதால் மகன் தன்பங்கை வரலாற்றுப் பெருமை உடையதாக நிறைவேற்றியுள்ளது பாராட்டுக்குரியது.

குறிப்பிட்ட இச்செய்தியை முழுதும் படித்தால் இப்புற்று நோய் ஆஸ்பத்திரி அமைப்பதற்கான மற்றைய வேலைகளையும் தான் பொறுப்பேற்பதாக அவர் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

இவ்வித வள்ளன்மை அரசியல் வாதிகளுக்குரிய பண்பல்லவென்று பரவலாய் பேசப்படுவதை நாமறிவோம் இது ஒரு தனித்துவமான செயல் என்று கணிக்கப்பட்டாலும் செல்வர்களுக்கு இவ்வித பணியில் ஈடுபடுவது அழகு என்பதை நாம் நினைவூட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

கொடையே தக்கோர் குணம் என்று தொடங்கின நாம் "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்ற முனிவரின் வாக்குடன் முடிப்பது பொருத்தமாகும்.

# 'பல்கலைக்கழகநுழைவுவாய்ப்பின்மை நாட்டுக்கே பேரிழப்பு"

## யாழ். மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் சந்திரசேகரம்

(யாழ்ப்பாணம்)

பல நாடுகளில் பல்கலைக்கழகம் செல்வதற்கு மாணவர்கள் இல்லாதிருக்கிறார்கள். இலங்கையிலோ பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதியுள்ள பல மாணவர்கள் இருந்தும் அவர்களுக்கு இங்கு இடமில்லாது போவதனால் அது நாட்டுக்குப் பேரிழப்பு மட்டுமல்ல கல்வி, ஒழுக்கத்துக்குமே இழுக்குமாகும்.

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுஉரையாற்றிய யாழ். பல்கலைக்கழகக் கல்வித் துறைத் தலைவரான திரு. ப. சந்திரசேகரம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு சந்திரசேகரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

1979-ம் ஆண்டு நடாத்தப்பட்ட க. பொ. த. உயர்தரப் பரீட்சைகளில் சுமார் 32 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறக்கூடிய தசதியைப் பெற்றிருந்தனர். அப்படியிருந்தும் 5 ஆயிரம் மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஏனையோருக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை. இப்பிரச்னை தீர்க்கப்பட்டாலேயே கல்வி வளர்ச்சியில் நாம் துரிதமாக முன்னேறமுடியும். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசியல்வாதிகள் எல்லோரும் ஒன்றுகூடி முயற்சிக்கவேண்டும்.

இந்த நாட்டின் இடைநிலைப் பள்ளி முறையிலும், கல்வி முறையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படவிருக்கிறது. இத்திட்டத்தினால் சமநிலை கொண்ட பொதுக்கலைத்திட்டம் தந்த நன்மைகள் ஒழிந்துவிடும்.

எமது அரசு கல்விக்காக ஆண்டுதோறும் 203 கோடி ரூபாவைச் செலவிடுகிறது.

இது இந்த நாட்டுச் செலவினத்தில் 6½ விதமாகும். ஒரு வளர்முக நாட்டிற்கு இது ஒரு பெரும் தொகையாகும். அரசு கல்விக்கு இவ்வளவு தொகையான பணத்தைச் செலவிடுவதையிட்டு நாம் பெருமைப்படவேண்டும். இப்பணம் நாட்டுநலன் கருதித்திட்டமிட்டுப் பங்கீடு செய்யப்படல் வேண்டும்.

### அதிபர் உரை

மத்திய கல்லூரி அதிபர் திரு. நா. ச. இரத்தினசிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

கல்வியின் நோக்கங்கள் மாற்றமடைய கல்விமுறைகளும் மாறிக்கொண்டே வந்துள்ளன.

எமது நாட்டிலும் கல்வி முறைகள் காலத்திற்குக் காலம் மாறிவந்துள்ளது.

மாணவர்கள் பாடசாலைகளில் பொதுக்கல்வியைக் கற்கும் போதே தொழிற்கல்வியையும் கற்கவேண்டும். அதற்காக மாணவர்களை தொழிற்சாலைகளுக்கு அனுப்பித் தொழிற்கல்வியைக் கற்பித்தல்வேண்டும். கல்வி அறிவுக்காக என்ற நிலை மாறி தொழிலுக்காகவும் என்ற கருத்து வரவேற்கப்பட்டது. அதனால் இன்று படித்தோரின் வேலையின்மையே பெரும் பிரச்னையாக வளர்ந்துள்ளது. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்குக் கல்வியில் மேலும் மாற்றம் அவசியம்.

மாணவர்கள் உளச்சார்பு, ஆர்வம், கரிசனை, தனிப்பட்ட திறமை ஆகியவற்றிற்கு ஏற்ப பல்வேறு தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கலாம். உயர்தரப் படிப்பிற்குப்போகாதவர்கள் தாம் அனுபவம் பெறும் தொழில்களிலேயே தங்கிவிடலாம். இத்தொழில்கள், இடைநிலைத் தொழில்கள், கனரகத்தொழில்கள், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் எனப் பலவாறாக அமையலாம்.

தொழிற்கல்வி அல்லது விசேட கல்வி உள்நாட்டு வெளிநாட்டுத் தொழிற்சந்தையின் தேவைகளுக்கு ஏற்றதாகவும் அமையவேண்டும். உள்நாட்டு வெளிநாட்டுத் தொழிற்தேவைகளோடு இணக்கமற்ற கல்விமுறை வேலைவாய்ப்புக்களைக் குறைப்பதாய் இருக்கும்.

எமது கௌரவ விருந்தினர் திரு. யோகேஸ்வரன் எமது கல்லூரியின் வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டவர். கல்லூரியின் கட்டிடத்திற்காக இருமுறை பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கித் தந்துள்ளார்.

திருமதி கலாதேவி சந்திரசேகரம் பரிசில்களை வழங்கினார். (கொ-அ)

## அருளாரமுதம் ஈந்தருள்வாய்!

சரவண பவனே சண்முகனே—சுத்த
சக்தி தந்தே அருள் வேலவனே
சரவணப் பொய்கையில் பிறந்தவனே
சதுர் வேத நாயகன் மன்னவனே
உரக படம்வளர் கண்ணனவன்
உயர் தனிப் பெருந்திரு மருகோனே
சுரர் படு துயர்தனைத் தீர்த்திடவே
சூரன் சிரமதைக் கொய்தவனே
திருமுரு காற்றுப் படை பாடத்
திருநக் கீரர்க் கருள் புரிந்தாய்
அருளொடு மன்பதை தழைத்திடவே
அருளா ரமுதல் ஈந்தருள்வாய்
குருவுப தேசம் புகட்டிப் பரன்
குருவாய் வந்தமை குகனேசா
வருபிணி மாயங்கள் மசித்து நன்றே
வல்வினை விலகிட அருள்புரிவாய்
நாவற் பழத்தைக் கொடுத் தௌவை
நாணச் செய்த நாவலனே
காவல் தருவாய் காரிருளில்
கந்தா குகனே கதிர்வேலா
மரண பயம் தைத் தீர்த்திடுவாய்
மகிழ்ந்தே புலனை ஆண்டிடுவாய்
கரதல மீரா றுடை யவனே
கருதிடு மன்பர் காவலனே
தேமாங் கனியின் தத்துவத்தால்
தேர்ந்த பழநி ஆண்டவனே
பூமா தேவியின் பொன்மேனி
பொலிவுற வெண்ணீ றணிந்தவனே
வல மிடஞ் சக்திகள் உள்ளவனே
வரங்களைப் பொழியும் மயிலோனே
தல மோரெண்ணில் நிறைபவனே
தவசர வணபவத் திறலோனே
சரவண பவாய சாந்தாய
சர்வாய சுத்தாய நமவென்றே
சரண மடைந்தோம் நின்பாதம்
சாந்தம் அருள்வாய் சடட்சரனே.

-- ச. தங்கமாமயிலோன்.

### இன்று சூரன்போர்

# ஆணவமலம் நீங்கியசூரன் சேவலும் மயிலுமானான்

— இ. சரவணபவன் —

நம்மை நல்லவர்களாகவும் தீயவர்களாகவும் ஆக்குவன நம் செயல்களே. உலகில் இரு சக்திகள் உள. ஒன்று நல்லது மற்றது எதிரிடையானது. தேவர்கள் தன் செயல்களினாலே தீய சக்திகளாற் பீடிக்கப்படுகின்றார்கள் என அறிகின்றோம். அதனால் அவர்கள் தாங்கள் புரிந்த தவறுகளின் பலாபலன்களை அனுபவிக்கின்றனர். அனுபவித்து முடிந்தபின் அவர்களை மீட்க ஆட்கொள்ள ஆறுமுகப்பெருமான் திருவுளங்கொள்ளுகின்றார். ஆறுதன்மைகள் அவருடைய ஆறுதிருமுகங்களாயின. 'ஞானந்தானுருவாகிய நாயகன்' என்கிறார் கச்சியப்பர். ஞானபண்டிதன் ஞானமேயுருவாகவுடையவர். அவர் கையிலிருப்பது ஞானசக்தியாகிய வேல். வேல் வணக்கத்துக்குரியது. அது அடியார் இன்னல்களைத்துளைத்து அறுப்பது. அன்பர்கள் இதயத் தாமரைகளை அறிவினால் மலரச்செய்வது.

'இன்ன மொருகா லென
திடும்பைக் குன்றுக்குக்
கொன்னவில் வேற்சூர்
தடிந்த கொற்றவா
முன்னம்
பனிவேய் நெடுங் குன்றம்
பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்'
—என்கிறார் நக்கீரர்.

இறைவனுடைய கருணை அறக்கருணை, மறக்கருணை என இருவகைப்படும். நல்லவர்களை அறக்கருணையாலும் தீயவர்களைமறக்கருணையாலும் ஆட்கொள்ளுகின்றான் இறைவன். சூரன் தான்பெற்ற பெருவரத்தின் மகிமையால் தேவர்களுக்கும் நல்லவர்களுக்குந்துன்பங்கள் பல புரிந்தான், அவன் இங்ஙனம் பல பாவச் செயல்களை நீண்ட காலம் இவ்வுலகிற் செய்வானாகில் மீளா நரகிற்கிஆளாவானென்பதனையும், தவத்தினால் பல வரங்கள் பெற்ற அவன் மாபெரும் பாவியாகிவிடக் கூடாது என்பதனையும் கருணையே உருவமான இறைவன் திருவுளங்கொண்டார். ஆகவின் தேமர்கள் வேண்டுதலுக்கமைந்து அவனை ஆட்கொள்ளவேண்டிக் குமரப் பெருமானாகத் தோன்றி வேலாயுதத்தால் அவனது உடலினை இருகூறாக்கினார். ஒரு கூறு மயிலாகவும் மறு கூறு சேவலாகவும் ஆனது. . மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் தன்னோடு சேர்த்தருளினார். இதனை விளக்கவே ஆலயங்களில் இவ்விழா நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்காதல் தலைமேற்கொண்ட தவமுனிவன் வீரமாமுனிவன்

துள்ளு தமிழ் நடையில் மனதை அள்ளும் கவிநடையில் - தொட்டாலே கைமணக்குமெனக் கற்றவர்கள் களிப்புடன் வியப்புறும் காப்பியமாம் 'தேம்பாவணி' எனும் தேன்தமிழ்ப் படைப்பினைப் படைத்த தமிழன்பன் தவத்திரு வீரமாமுனிவரின் 3வது நூற்றாண்டு தினத்தை கார்த்திகை 8ம்நாள் தமிழ் உலகு உவப்போடு நினைவு கூர்ந்தது. முத்தமிழால் முக்காலத்தையும் வெல்லும் சொற்சித்திரங்கள் செப்பிச் சிந்தைகவரும் இவர் பிறப்பால் ஒரு இத்தாலியர். இருப்பினும் தமிழ்க் காதல் தலைக்கொண்டு தமிழ்ப் பெருவாழ்வு தாமியற்றி தம் காதல் பரிசாக இன்தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் இயற்றிய பெருமை இவரைச்சாரும்.

றும் அச்சபயச் சீலன் வாருப் இரும்படியும்' என இரட்டற மொழிந்தாலும், கையில் உள்ள புத்தகத்தை படிக்கச் சொல்கின்றாே அல்லது அமர்ந்து இரும்படிக்கச் சொல்கின்றாே என மயங்கிய முனிவன் தமிழ்மயக்கம் கொண்டு தமிழ்க்காதலனாகி தமிழோடு இரண்டறக் கலந்ததாக கூறுவர். பலபொருளைக் குறிக்கும் ஒரு சொல் ஆட்சியை இவரது கவிதைகளில் பல இடங்களில் இவர் கையாள்வது இதன் தாக்கமாக இருக்கலாம்.

### இதயத்தெழுந்த இன்தமிழ்நதிகள்

தேம்பாவணி திருக்காவலூர்க்கலம்பகம் என்பன இவ் இத்தாலிய இதயத்தில் இருந்து உற்பத்தியான இரு இன் தமிழ்

**— பற்றிமாகரன் —**

### மேற்கே உதித்த தமிழ்ச் சூரியன்

வீரமாமுனிவரின் வாழ்க்கை வட்டத்தை விளங்கினாலே அவர் எத்துணை தனித்தன்மை வாய்ந்த ஆக்கசக்தி என்பதைப் புரிந்த கொள்ளலாம். 1680ம்ஆண்டு கார்த்திகை எட்டாம் நாள் மண்ணுலகில் மலர்ந்த 'கொன்ஸ்தான்சியுஸ் யோசவ் பெஸ்கி' என்ற மனித மலர் இறைவன் பதம்பணியும் தூயமலராக கிறீஸ்தவ துறவியாக மாறியது. சேவை எனும் தேரேறி தென்னிந்தியாவை வந்தடைந்த யோசவ் பெஸ்கி தமிழ்மலராகத்தன்னை மாற்றி வாடமலராம் தேம்பாவணியை தொடுத்தார்.

### காதல் பிறப்பு

இவருக்கு தமிழ்க்காதல் கனிந்தமைக்கு காரணக்கதையொன்று வழக்கிலுண்டு. ஒரு நாள் கொல்லர் பட்டறை ஒன்றுக்கு கையில் புத்தகமொன்றுடன் சென்றார் என்

இலக்கிய நதிகள், அத்தோடு தமிழ்ச்சிறுகதை உலகின் வழி காட்டி நூல் எனப்போற்றப் படும்பரமார்த்தகுருவின் கதை பெஸ்கியின் கற்பனைத்திறனின் எடுத்துக்காட்டு. இன்னும் தமிழை உலகமொழியியல் அரங்கில் பேரழகியாக கூட்டிச் சென்றவரும் இவரே. இவர் தனது கைப்பட எழுதி 1744 என ஆண்டிடப்பட்டுள்ள தமிழ் - இலத்தீன் அகராதியே பிறமொழி அறிஞர்கள் தமிழாய்வு செய்யப்பட்டதற்கு கால்கோள் இட்டதெனலாம். இலத்தீன் உலகிலுள்ள கிறீஸ்தவ சபைகளுக்கெல்லாம் பொது மொழியாகத் திகழ்ந்து கொண்டிருந்தவேளையிலே இயற்றப்பட்ட இவ் அகராதியும் இவரால் இலத்தீனில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட திருக்குறள் (காமத்துப்பால் நீங்கலாக) உம் தமிழின் பால் பிறமொழியியலாளர் ஆர்வம் காட்ட நுழைவாயிலாக நின்றன.

### வசனநடையோடு பிறப்புற்ற பரமார்த்த குரு

தென்இந்தியாவில் வசனஉருவான தமிழ் நடைச்குத்தப்தை என அறிஞர்களால் போற்றப்படும் தத்துவப் போதகர் ருெபேர்ட்டி நொபிலியைத் தொடர்ந்து வீரமாமுனிவர் வசனநடை நூலாக்கத்துள் நுழைந்தார். பாமரமக்களின் சிந்தனை கிளர்ச்சியை கவிதையாக்கத்தால் நடாத்தமுடியாது எனக்கண்ட துறவிகள் பலர் வசனநடை நூல்களால் பண்டிதமிழை பாமரத்தமிழாக்கப்பாடுபட்டனர். ஆயினும் வீரமாமுனிவரின் 'பரமார்த்த குரு' கதை அதிலுள்ள நகைச் சுவைதன்மையாலும் உத்திகளாலும் மக்களிடை பிரபல்யம் பெற்றதைபோல் வேறு ஒருவரதும் படைப்புகள் பிரபல்யம் பெறவில்லை. பரமார்த்த குரு கதையில் இன்று வழக்கில் இல்லாத பல வசனநடை அமைப்புகள் நிறைந்து காணப்படுகின்றன, 'ஆர்கும்' எனும் சொல்லை வீரமாமுனிவரின் வசனங்கள் நடுவிலும் இறுதியிலும் சுமந்து பொருள் கூறு

நூல்கள் தோன்றியுள்ளன ஆயினும் மேலைத்தேயத்து வீரமாமுனிவரின் திருக்காவலூர்க் கலம்பகம் இக்கலம்பகங்களுக்கு சற்றும் இலக்கிய வளம் குன்றாதவகையில் அமைந்துள்ளது. திருக்காவலூர்க் கலம்பகத்தில் அடிகளின் இதயஉணர்வு தெட்டெனப் புலனாகிறது.

### மக்கள் மயப்படுத்தல்

வீரமாமுனிவர் கிறீஸ்தவத் திருமறையை மக்கள் மயப்படுத்தும் நோக்கினையே தன் இதய உணர்வாகக் கொண்டிருந்தார். மேலைத்தேயத்து கிறீஸ்தவமறை கீழைத்தேயத்தால் கிரகிக்கப்படமுடியாத ஒன்றல்ல. ஒன்றே இறைவன் ஒருவரே மாந்தர்குலம் என உணர்ந்த அடிகள் அந்த அந்த நாட்டுக்கு ஏற்ப வழிபாட்டு முறைகள் அமையவேண்டும் ஏன்பதே அடிகளின் அகக் கருத்து. இக்கருத்தின் பிரதிபலிப்பாக காவிஉடை அணிந்து காய்கறி உணவு உண்டு அடிகள் முழுத்தமிழ்த் துறவியாகத் திகழ்ந்தார் தமது பெயரைக்கூட தமிழ்மயப்படுத்தி கொன்ஸ்டான்ஸ் எனும் சொல்லின் மொழி பெயர்ப்பாக தைரியநாதர் என-

அன்னை மரியாளுக்கு அமைத்த ஆலயத்தில் மரியன்னை தமிழ்ப் பெண்ணாகச் சேலைகட்டி நிற்கும் திருவுருவையே அமைத்து வழிபாடியற்றினர். திருக்காவலூர்க் கலம்பகத்தில் அதே மரியாளே போற்றிப் புகழப்படுகிறாள் தமிழ் பெருநெறி வழக்கில் அன்னை மரியாளின் கூந்தலிலே மலர்சூடிக் கற்பனை வடிவுகாணும் அடிகள் ''கோளணிந்த மூலணிதார் குடைவண்டாப் புகழ்பாடி மதுவுண்ணேனே'' எனப்பாடி தமிழ் இலக்கிய நெறிக்கு தன்னை ஆளாக்கி தான் மரியன்னை மலர்க்கூந்தல் மருங்கமரும் வண்டாக மாறிவிடுகிறார். மேலும் தமிழ்ப் பக்தி நெறிப் பாவலர்கள் தம்மைத் திருத்தலங்களின் புல்லாகவும் பூண்டாகவும், கல்லாகவும் கற்பனை செய்து கவிபாடுவது பக்தித் தமிழ்மரபு. மறு பிறப்பில் நம்பிச்கையற்ற அடிகள் கூட தன்னைப் புல்லாகப்பிறக்க வைக்கும்படி கேட்காவிட்டாலும் திருக்காவலூர்த்திருத் தலத்து புல்லாகத் தான் கிடந்து பண்பாடவேண்டும் என்று ஆசிப்பதை திருக்காவலூர்க் கலம்பகத்தில் ''கேளணிந்த காவனலூர்க் கிளர் புனத்துப் பசும்புல்லாக் கிடவேன் நானே'' எனப் பாடுவதால் அறியலாம். இவ்வாறாக முற்றிலும் தமிழ்மயப்பட்ட நெஞ்சோடு தமிழ் எடுத்த அடிகள் மரியன்னையை தமிழ் நாட்டின் காவல் தெய்வமாக காட்டவே திருக்காவலூர்க்

## அறிவியல் பூஞ்சோலை

வதைக்காணலாம். அத்தோடு வசனநடையின் ஆரம்பகால கட்டத்திற்கே உரித்தான தொடர் நடைகளும் 'பரமார்த்த குரு கதையில் காணப்பட்டாலும் இதுவே தமிழ்வசன நடையை மக்கள் மயப்படுத்தியது என்பது மறுக்கமுடியாத உண்மை.

### அகராதி ஆக்கத்தில் அடிகளின் அரும்பணி

அடிகள் இத்தாலி கிரேச்கம் இலத்தீன் போர்த்துகீஸ், தெலுங்கு, உருது, சமஸ்கிருதம், ஆகிய பலமொழிகளையும் படித்த மொழியியலாளர் என்பதால் அவர் சிறந்த சொல்வளம் உடைய மூளைத்திறன் படைத்திருந்தார். இதன் வெளிப்பாடாக தமிழ் உலகுக்கு அகராதி அமைப்பை அறிமுகப்படுத்திய பெருமையை அடிகள் தட்டிச்செல்கிறார். சதுரகராதி என்னும் அரும் பெரும் தொகுப்பை வெளியிட்ட அடிகள் அகராதி தொகுப்புக்கு அடிக்கல் நாட்டினார். அத்தோடு நின்றுவிடாது தமது பரந்துபட்ட இலக்கண அறிவால் தொன்னூல் எனும் இலக்கண நூலை தமிழுக்குத் தந்தார். இதில் இவர் பழந்தமிழ் இலக்கணவாளரை மட்டும் கருத்தில் கொள்ளாது மேலைத்தேய இலக்கண அமைப்புக்களையும் மனதில்கொண்டு புதியதோர் மொழியில் ஆய்வு நோக்கத்தோடு செயற்பட்டிருக்கிறார்

### இலக்கியப்பணி

வசனநடை பாணியில் பரமார்த்தகுரு சிறுகதையை அடிகள் எழுதி பாமரமக்களிடை பிரசித்திபெற்றாலும் அவரை மாபெரும் தமிழறிஞனாக இனங்காட்டுவது அவரின் இலக்கியப்படைப்புக்களே. தேம்பாவணி- திருக்காவலூர்க் கலம்பகம் -கித்தேரி அம்மாள் அம்மானை ஆகிய அவரின் செய்யுள்நடைச்செல்வங்களே

தமிழ் அன்னைக்கு காலத்தால் வாடாத கவிதை மாலை சூட்டப்புறப்பட்ட அடிகள் 'கலம்பக'த்திலேயே தன் திருக் காவலூர் இலக்கிய அமுதை வடித்திருக்கிறார். பல்லவர் காலத்து நந்திக் கலம்பக காலம்முதல் மதுரைக் கலம்பகம் காசிக் கலம்பகம் தோன் றும் நூ[illegible] காலமெனும் [illegible]

வழங்கிவந்தார். அடிகளின் இலக்கியம் ஒருமத இலக்கியமாயினும் எவ்வாறு மத இன வட்டத்தை மீறி பொதுமை இலக்கியமாக இலங் கிறதோ அவ்வாறே அடிகளும் எம் மத இன மொழி மக்களாலும் கௌரவிக்கப்படும் அறிஞனாக இலங்கினார். மதுரைச் சங்கமே''வீரமாமுனிவன்'' எனும் சிறப்புப்பெயரை அடிகளுக்கு அளித்தது. இஸ்லாமிய சந்தா சாகிபு 'இஸ்மதி சன்னியாசி' என இவரை அழைத்ததாக வரலாறு கூறுகிறது. இவ்வாறாகத் தன்னை மக்கள்மயப் படுத்திய அடிகள் திருக்காவலூர்க் கலம்பகத்தில் அடிகளின் அன்புத் தெய்வமாம் அன்னை மரியாளை மக்கள் மயப் படுத்தினர்.

### தமிழ்ப்பெண்ணாக மரியன்னை

ஏலாங்குறிச்சியில் அடிகள் கலம்பகத்தை யாத்தார் இதனை

''நதிவழங்கு காவலூர்ப்
பதிவழங்கு காவலே
நன்னையாக முன்னையாள்

என்னையாளு மன்னையே''

என எடுத்த எடுப்பிலேயே அடிகள் கூறிவிடுகின்றார். அத்தோடு நில்லாது மரியன்னையின் செபமாலை பக்தியை ''மண்ணவரை மேலேற்ற விண்ணவர் விடுத்த மணிவடமோ — அல்லல் இழைக்குப் வல்வினையை அறுத்தொழிக்கும் அரும்படையோ — ஆதரித்து அழைக்கும் அடியவரை அருளாற் பிணிக்கும் அருந்தளையோ'' எனச் சொல்லாட்சி கொண்டு செந்தமிழகத்து வரன்முறைச் சொத்தாக்குவதைக் காணலாம்.

— தொடரும்

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 28ம் திகதி

வியாழக்கிழமை

(13-11-80)

மேடம்:- பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும். கல்வித் துறையில் அதிக ஈடுபாடு காணப்படும். தாய் வழியால் தன வரவிற்கும் இடமுண்டு. எதிலும் அதிஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும்.

இடபம்:- எப்பக்கம் திரும்பினும் ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் காத்திருக்கின்றார்கள். தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும் பங்கு உண்டு.

மிதுனம்:- பணத்தைக் கொடுத்துப் பகையைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். தொழில்த் துறையில் சோர்ந்த நிலை தென்படும். நிதான புத்தியுடன் நடக்கவும்.

கடகம்:- இல்லற வாழ்வில் இணைப்புக்கள் இறுக்கமடையும். காதல் வசப்பட்டவர்களுக்கு கனிவான தினம். பசுமையான நினைவுகள் நெஞ்சில் அலைமோதும்.

சிங்கம்;- தொழில்த் துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கும் இடமுண்டு. நண்பனின் கடிதம் வேதனையைத் தரலாம். பணமுடையினால் மிகவும் வேதனைப்படுவீர்கள்.

கன்னி:- பூமியால் இலாபம் உண்டு. புத்திரர் புகழும் சேரும். பிதா வழி மூலம் மகிழ்ச்சிதரும் செய்தியும் கிடைக்கலாம். பெரியவரின் ஆதரவும் தவறாமல் வந்து சேரும்.

துலாம்:- உத்தியோக உயர்வும் உரிமைகளைப் பெறுவதற்கும் இன்று உகந்த நாள். வரவிலும் திருப்திகரமான நிலை காணப்படும். சிறப்பான தினம்.

விருச்சிகம்:- உண்மை வழி நின்று உயர்ச்சி அடைவீர்கள். மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். எதிர்பாராத அதிஷ்ட லாபமும் கிடைக்கலாம்.

தனுசு:- கண்துடைப்பு வேலை நடைபெறும். மூத்த சகோதரத்தின் நடவடிச்கை வேதனையைத் தரலாம். குடும்பத்தில் உறவு முறை திருப்திகரமாக இருக்காது.

மகரம்:- துன்பத்தின் ரேகைகள் தொடரும். எதற்செடுத்தாலும் சீறிவிழுவீர்கள். கொடுக்கல் வாங்கல் மூலம் தொல்லைகள்தோன்றும். தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தி நடக்கவும்.

கும்பம்:- பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள். கல்வித் துறையில் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படும். சிறப்பான தினம்.

மீனம்:- ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்திவிடச் சிலர் திட்டம் போடுவார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## தேசிய வருமானத்தில் ஒரு கண்ணோட்டம்

**எஸ், எஸ். தங்கராசா**

இதுவரை தேசிய வருமானம் என்றால் என்ன? அதன் சுற்றோட்டம் எவ்விதம் அமையும்? தேசிய வருமானத்தினை எவ்வெவ் வழிகளில் கணிக்கலாம்? அவ்விதம் கணிக்கும் போது எவற்றினை அவதானிக்கவேண்டும் என்று கவனித்த நாம் அடுத்து இத் தேசிய வருமானத்தினைக் கணித்தலினால் உள்ள நன்மைகள் எவை? இவ்வித தேசிய வருமானக் கணிப்பீடு சரியான குறிகாட்டியாகுமா என்பவற்றைச் சிறிது மேலோட்டமாயும் சுருக்கமாகவும் கவனித்துவிட்டு ஏனைய பகுதிகளைச் சற்று அழுத்தமாகவும் ஆழமாகவும் நோக்குவோம்.

1 நாடுகளின் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்கான திட்டங்களைத் தீட்டும்போது தேசிய வருமானப்புள்ளி விபரங்கள் பெரிதும் உதவியாகின்றன. உதாரணமாக சனத்தொகை ஓர் ஆண்டில் ஒரு சத விதத்தால் வளர்ந்தால் 1 சத விதத்தினால் முதலீடும் அதிகரிக்கடன் மூலமே மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பேணமுடியும்.

2. நாடுகளின் தலா வருமான அதிகரிப்பானது ஓரளவு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதாக அமைகின்றது. தலா வருமானக் குறிகாட்டி திறமையாகச் செயலாற்றாவிடினும் உயர் வருமானம் உயர் வாழ்க்கைத் தரத்தினைப் பேணவைக்கும் என்பதை ஓரளவில் ஏற்க முடியும்.

3. பேராசிரியர் சாமுவேல்சனின் கூற்றினை நோக்கின் 500 ஐக்கிய அமெரிக்க டொலருக்கு அதிகமான தலா வருமானம் பெறும் நாடு அபிவிருத்தியடைந்த நாடென்றும் 500 ஐ அமெரிக்க டொலரிலும் குறைவான வருமானம் பெறும் நாடு அபிவிருத்தி அடையாத நாடு என்றும் அறியமுடிகிறது இது எந்த அளவிற்குச் சரியானது என்பதை விடுத்து சாதாரண குறிகாட்டியாக நோக்குமிடத்தில் நாடுகளுக்கிடையிலான அபிவிருத்திக்கணிப்பினை மேற்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். நகரில்குடிநீர் அசுத்தமாவதை தடுக்கவழிகள் என்ன?

# "கழிவுநீரை நிலத்திற்குக் கீழாக வெளியேற்ற திட்டம் வேண்டும்!

## பிரச்னைதீர இதுவேவழி" என்கிறார் பொறியியலாளர்

(யாழ்ப்பாணம்)

**மலகூடக் கழிவுநீர் கிணறுகளுக்குச் செல்வதைத் தடுப்பதற்கு யாழ். நகரப்பகுதி, நல்லூர்ப்பகுதிகளில் கிணற்றிலிருந்து 40 அடிக்கு அப்பால் மலகூடக்குழி கட்டப்படவேண்டும். அரியாலை, கொழும்புத்துறை, கரையோரப் பகுதிகளில் மண்பூமியாக இருந்தால் 25 அடிக்கு அப்பால் கட்டப்படலாம். மண்பூமியாக இல்லாவிடில் 40 அடி இருக்கவேண்டும்''.**

யாழ். மாநகரசபை கமிட்டி அறையில் நடந்த குடிநீர் அசுத்தமாக்கப்படுதல் பற்றிய மகாநாட்டில் யாழ். நீர்வளச் சபைப் பொறியிலாளர் திரு. குணசேகரம் மேற்கண்ட ஆலோசனையைத் தெரிவித்தார்.

முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடந்த இம்மாநாட்டில் இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காணப்படும்வரை இந்த ஆலோசனையை மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

### ஓட்டுமடத்தில்

ஓட்டுமடம் 80-ம் இலக்க வீட்டிலுள்ள நல்லநீர்க்கிணறு அசுத்தமடைந்ததுபற்றி முதல்வருக்குச் செய்றப்பட்ட புகாரையைத்தொடர்ந்து முதல்வர் இதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிர்வாகசபையினரிடம் கோரியிருந்தார்,

நிர்வாகசபைப் பொறியியலாளர் திரு. குணசேகரம் தமது உதவியாளருடன் உடனடியாக ஓட்டுமடம் சென்று ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தார்.

இம்மாநாட்டில் சமுகமளித்திருந்த நீர்வளச்சபைப் பொறியியலாளர் திரு. குணசேகரத்தை முதல்வர் நேரில் பாராட்டினார்,

ஓட்டுமடத்திலுள்ளகிணற்று நீரில் அடுத்தவளவில் கட்டப்பட்டுள்ள மலகூடக் குழியின் கழிவுப்பொருட்கள் காணப்பட்டதாக பொறியியலாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 35 அடிக்கு அப்பால் இந்த மலகூடக் குழி கட்டப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

### சுகாதாரப் பகுதியின் சுற்றறிக்கை

55-ம் ஆண்டு சுகாதாரப் பகுதியினர் வெளியிட்ட சுற்றறிக்கையொன்றில் மலகூடக் குழி கிணற்றிலிருந்து 25 அல்லது 30 அடிக்கு அப்பால் கட்டப்படலாமென்று கூறப்பட்டிருந்ததாகவும், 57-ம் ஆண்டு சுற்றறிக்கைப்படி 15 அல்லது 20 அடிக்கு அப்பால் மலகூடக் குழி கட்டப்படவேண்டுமென்று கூறப்பட்டிருந்தாகவும் இதனையே மாநகரசபை கடைப்பிடித்து வந்ததாக்வும் முதல்வர் விஸ்வநாதன் தெரிவித்தார்.

ஓட்டுமடத்தில் 35 அடிக்கு அப்பால் கட்டப்பட்டிருந்தும், கிணற்றுநீரில் மலகூட நீர் கலந்துள்ளதால் இதுபற்றி ஆராயவே இம்மாநாடு கூட்டப்பட்டதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

### முதல்வர் கருத்து

முதல்வர் மேலும் கூறியதாவது: ''தற்பொழுது நகரில் 4500 வாளி மலகூடங்கள் உள்ளன, இவற்றில் நாங்கள் பதவிக்கு வந்தபின் 500 மலகூடங்கள் நீரடைப்பு மலகூடங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதற்காக 5 பைக்கற் சீமெந்தும் கோப்பையும் சபையினால் வழங்கப்பட்டது. தற்காலிகமாக இது நிறுத்தப்பட்டுள்ளது. குருநகர், பாஷையூர், நாவாந்துறை, முஸ்லிம் வட்டாரங்களில் கிணற்றுக்குச்சமீபமாகவே குழிகள் உள்ளன. இவற்றிற்கு மாற்றுவழி என்ன என்பதை ஆராயவேண்டும். நாம் மக்களைக் காப்பாற்ற வேண்டும், சுகாதார முறைப்படி வாழச்செய்யவேண்டும். இதற்கு வழிசொல்லுங்கள்'' என்றார்.

### அங்கீகரிக்கவேண்டும்

யாழ். வைத்திய சுகாதார அத்தியட்சகர் டாக்டர் விஜயராசா ''மலகூடக் குழிகளைத் தொடர் கிடங்குகளாகக் கட்டுவதன் மூலமே இப்பிரச்னைக்கு ஒரளவு தீர்வுகாணலாம், குழிகளைக் கட்டமுன்னர் சுகாதாரப்பகுதியினரும் தொழில்நுட்பப்பகுதியினரும் பார்வையிட்டு அங்கீகாரம் வழங்க வேண்டும்.

திரு. தம்பு கந்தையா: ''யாழ்நகர்ப் பகுதிகளில் பல ஏழை மக்களும் வாழ்கின்றார்கள். வாழி மலகூடத்தை நீரடைப்பாக மாற்றவே கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலையில் எதிர்க்கிடங்குகள் கட்டுவது முடியாத காரியம். சபைதான் உதவிசெய்யவேண்டும்''.

# "உயிர்வாய்வு முறை

## யாழ்ப்பாணத்தில் சாத்தியமில்லை"

ஆணையாளர் கே. சிவஞானம்: குழாய்மூலம் மக்களுக்கு நீர்வழங்கினால், கிணற்றுநீரைப் பாவிக்கவேண்டிய நிலை ஏற்படாது. குடிப்பதற்கும் சமையலுக்கும் குழாய் நீரைப் பாவிக்கலாம். மற்றும் தேவைக்கு கிணற்று நீரைப் பாவிக்கலாம்''.

முதல்வக; ''யாழ். நகருக்கு 5 லட்சம் கலன் குடிநீர் தேவை. தற்போது 3 லட்சம் நீரே கிடைக்கிறது. ஆணையாளர் காலத்தில் குடிநீருக்காக 7795 ரூபா கட்டப்பட்டது. ஒன்றரை வருடத்திற்கு மேலாக குடிநீர் கிடைக்கவில்லை. பிரதமர் இவ்விடயத்தில் தலையிட்டு, யாழ் நகருக்கு 2லட்சம் கலன் நீர் ஏன் வழங்கவில்லை என்று கேட்கிறார் ஜூனில் தருவதாகச் சொன்னார்கள். பின் செப்டம்பர் என்றார்கள். இப்போது டிசம்பரு மாச்சு. நீர் கிடைக்கவில்லை. அரசின் உதவி இதுதான். அறிந்துகொள்ளுங்கள்.

### ஆஸ்பத்திரிக் கிணற்றில்

''யாழ். ஆஸ்பத்திரிக் கிணற்றில் அசுத்தநீர் சென்றதுபற்றி பிரஸ்தாபிக்கப்பட்ட போது சுகாதார அத்தியட்சகர் வெளியிலுள்ள கழிவுநீர் கிணற்றுக் கட்டினால் உள்ளே செல்வதால் இந்த நிலைமை ஏற்பட்டதென்றும் நோயாளிகள் மலகூடங்களைப் பாவிக்கவேண்டும்'' என்றபோது ''மலகூடங்களை எப்படிப் பாவிப்பது, அதற்குள் செல்லவே முடியாதே'' என்று மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ். தியாகராசா சொன்னார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அத்தியட்சகர், மலகூடங்கள் அசுத்தமாக இருப்பதால் தான் நோயாளிகள் அதனைப் பாவிக்காமல் இருக்கின்றார்கள் என்றார்.

### கிணறுகளுக்கு குளோரின்

கிணறுகளுக்கு ஒவ்வொரு வாரமும் குளோரின் போடவேண்டுமென்று சுகாதார அத்தியட்சகர் தெரிவித்தயோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### உயிர்வாய்வு முறை

உயிர்வாய்வுமூலம் இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதுபற்றி ஆலோசிக்கப்பட்ட போது யாழ். மாநகரசபைவேலைப்பகுதிப் பொறியியலாளர் திரு.வி. சச்சிதானந்தன் கூறியதாவது: ''உயிர்வாய்வு முறையை ஜப்பான், சீனு போன்ற நாடுகளில் வெற்றிகரமாகப் பயன்படுத்துகிறார்கள். உயிர் வாய்வு என்பது கழிவுப் பொருளிலிருந்துவரும் சக்தியை வேறு தேவைக்குப் பயன்படுத்துவதாகும். இந்தியாவில் இந்த உயிர்வாய்வுமுறையைப் பயன்படுத்த மக்கள் தயங்குகிறார்கள். சாணத்திலிருந்து உயிர்வாய்வுமுறை மூலம் வரும் சக்தியை இந்தியாவில் பயன்படுத்துகிறார்கள். மலகூடக் கழிவிலிருந்துவரும் சக்தியைப் பயன்படுத்தி வருகிறார்கள். சீனவில் பெரிய அளவில் பயன்படுத்துகின்றனர். இலங்கையில் உயிர்வாய்வு முறைபெரிய அளவில்பின்பற்றப்படவில்லை எங்கள்கலாச்சாரத்திற்கு யாழ்ப்பாணத்தில் இம்முறை சாத்தியமாகாது என்பது என் கருத்தாகும்''.

### நேர்மையாக கடமை புரிந்தால்...

திரு. என். ரி. செல்லத்துரை: ''சுகாதாரப்பகுதியினர் சரியான முறையில் நேர்மையாக,மனச்சாட்சிப்படிகடமையாற்றியிருந்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. சுகாதாரப்பகுதியினருக்கு நகரின் சுகாதாரத்தில் அக்கறையில்லை. இங்கு சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர் ஒவசியர் எவரையும் காணவில்லையே?''

முதல்வர்: இந்தக் கூட்டத்தில் அப்படி பேசுவது சரியல்ல.

திரு. என். ரி.செல்லத்துரை ''ஏன் பேசக்கூடாது. இங்கு இருப்பது எல்லாம் தெரிந்தவர்கள்தானே. சுகாதாரப் பதியினரை தாங்கள் காப்பாற்ற விரும்பினால் காப்பாற்றுங்கள். நாங்கள் போய்விடுகிறோம். [illegible] யர்மார் உறுப்பினர்களைச் சந்தித்து நகரின்சுகாதாரம்பற்றி கலந்து ஆலோசிப்பார்கள். இப்போது 'அவர்கள் உறுப்பினர்களைச் சந்திப்பதே இல்லை''

### கரையோரப்பகுதி கிணறுகள்

திரு. சண்முகராசா; ஏற்கனவே உள்ள கிணறுகள், மலகூட குழிகளால் பாதிப்பதை தவிர்ப்பதற்கு வழிகாணவேண்டும்.

திரு. தம்பு கந்தையா: ''மற்றக் கிணறுகளை, குறிப்பாக கரையோரப்பகுதி கிணறுகளையும் நீர்வளசபை பரிசோதனை செய்யவேண்டும். அங்கெல்லாம் 15 அடிக்குகுறைவாகவே மலகூடக்குழி கட்டப்பட்டுள்ளது.

திரு. மரியாம்பிள்ளை: ''நாவாந்துறைப் பகுதியிலும் 20 அடிக்கு குறைவாகவே குழிகள் கட்டப்பட்டுள்ளன''

ஜனுப் முகதீன் பிச்சை: ''முஸ்லிம்பகுதியிலும் 12 அடி முதல் 20 அடிவரை குழிகள் கட்டப்பட்டுள்ளன. குடிசனம் நெருக்கமாக உள்ளது''.

திரு. தம்புகந்தையா: ''அரசாங்க வீடமைப்புத் திட்டங்களிலும் 15 அடியில்தான் மலகூட குழி கட்டப்பட்டுள்ளது. அக்குழிகள் நிரம்பியுள்ளன.

முதல்வர்: ''சில உறுப்பினர்கள் வாளி மலகூடங்களை மாற்றுமல் இதற்கு முடிவு காணும் வரை வைத்திருக்கலாமென்று கூறியுள்ளனர்.

திரு. செல்லத்துரை; ''4000 வாளி மலகூடங்கள் ஒழுங்காகச் சுத்தம் செய்யப்படுவதில்லை. சில இடங்களில் கிழமைக்கு 2 முறைதான் சுத்தம் செய்கிறார்கள். சுகாதாரப் பகுதியினர் இதனைக் கவனிப்பதில்லை. இதனால்மக்கள்கஷ்டப்படுகின்றனர். வாளி மலகூடங்களை மாற்றவேண்டும். மலகூடி குழிகளுக்கு கீழ்பக்கத்திலும் கன்கிறீட் போடவேண்டும். 10 வருடம் பாவிக்கலாம்''.

### பொறியியலாளர் விளக்கம்

பொறியியலாளர் திரு குணசேகரம்: ''குழிக்கு கீழே கொங்கிறீட் போட்டால் குழியிலுள்ள நீர் வெளியில்செல்ல முடியாது. கூடிய சீக்கிரத்தில் குழி நிரம்பி மலகூடத்திற்குள்ளும் நீர்வந்துவிடும்''.

திரு. என்.ரி. செல்லத்துரை ''யாழ். நகருக்கு, இரணைமடு பகுதியிலிருந்து நல்ல குடிநீரை குழாய்மூலம் கொண்டுவர நீர்வளச் சபையினர் அரசுக்கு சிபார்சு செய்யவேண்டும்''.

திரு. எஸ். தியாகராசா: ''யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரை இந்த மலகூட பிரச்னை முக்கிய பிரச்னையாகும். இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வுகாணுமாறு அரசிடம் கோரவேண்டும்''.

திருமதி சுவாமிநாதர்: ''மலகூடக்கழிவு நீரை, நிலத்திற்கு அடிபால் அப்புறப்படுத்த ஒரு பொதுத்திட்டம் கொண்டுவர வேண்டும், இதனை நான் ஒரு வேண்டுகோளாகக் கேட்கிறேன்,''.

### பிரச்னைதீர நிரந்தரவழி

''இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண்பதானல் அது தான் வழி. கழிவுநீரை நிலத்திற்கு கீழால் வெளியேற்றும் திட்டத்தை அமுல் செய்ய வேண்டும்.

### அரைப்பரப்பில் வீடுகட்டி

திரு. செல்லத்துரை: ''யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்புக் காணி ஒரு லட்சம் ரூபா விற்கிறது. அரைப் பரப்பில் 2 வீடு கட்டுகிறார்கள். அந்த அரைப்பரப்பில்தான் வீடு, கிணறு, மலகூடம்கட்டவேண்டும், இந்த நிலையில் 40அடிக்கு அப்பால் குழிகட்டமுடியுமா? ஆதலால் நல்ல முடிவு எடுக்க வேண்டும். இடத்திற்கு இடம் தூரத்தை மாற்றக்கூடாது''.

பொறியியலாளர் திரு குணசேகரம்: ''யாழ்ப்பாணத்தில் தொற்றுநோய் அதிகம் உற்பத்தியாகிறது சுகாதாரம் பற்றி புகார்கள் குறைவாகவந்திருக்கலாம். ஆனல்சுகாதாரப் பகுதியினர் அதிகம் அக்கறை எடுக்கவேண்டும். வேறு இடங்களிலும் கிணறுகள் கழிவு நீரால் பாதிக்கப்பட்டுள்ளன. 55ம் ஆண்டு சுற்றறிக்கையில் நிலத்தில் எவ்வித வெடிப்பும் இல்லாவிட்டால் 25 அல்லது 30 அடியில் குழி கட்டலாம் என்று கூறம்பட்டது. நிலத்தில் வெடிப் இருந்தால் 40 அடிக்கு அப்பால்தான் கட்டவேண்டும்''.

திருமதி சுவாமிநாதர்; ''மலகூட குழியை சிலர் நன்ருக சிமெந்தால் பூசுவதில்லை. குழி தானே என்று பூசாமல் விட்டுவிடுகிறார்கள் இதனல் கழிவு நீர் செல்லவும் இடமுண்டு.

திரு, எஸ். தியாகராசா: சனத்தொகை கூடுகிறது. முன்பு 8 பரப்பில் வீடுகட்டினேம். இன்று ½ பரப்பில்கட்டுகிறேம். அதனல்தான் கிணற்றுக்கு சமீபத்தில் குழி வருகிறது. வடிகால்நீர் தேங்கிநிற்கிறது. கடலுக்கு போவதில்லை. கிணற்றுநீர் அசுத்தமாவதற்கு மாநகரசபையின் வடிகாலும் ஒரு காரணமாகும்.

திரு. அலோசியஸ்: ''ஓட்டுமட கிணறுபோல், பாஷையூரிலும் கிணறுகள் உண்டு: மலகூடக்குழிகள் நிரம்பியுள்ளன. சுத்தம் செய்யப்படுவதில்லை. ஆதலால் இதற்கு ஒரு பாரிய திட்டம் அவசியம்''.

இறுதியில் சகல கிணறுகளுக்கும் உடனடியாக குளோறின் போடவேண்டுமென்ற ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. மக்களை குடிநீரைச் சுடவைத்துப் பாவிக்கும்படி கேட்டுக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. (ஈ)

---

## இளங்கலைஞர் மன்ற கால்கோள்விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை இளங்கலைஞர் மன்ற கலா மண்டப கால்கோள் விழா. இன்று காலை நல்லூரில் நடைபெறும்.

இவ்விழாவில் இசைமேதை கலாநிதி எம். பாலமுரளி கிருஷ்ணு இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் எம். பி. திரு. மு.சிவசிதம்பரம், யாழ். மேயர் திரு. இ. விசுவநாதன், யாழ். மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர், பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா. இந்திரபாலா, திரு. ராம் குமாரசாமி, திரு. சி. சின்னத்துரை, திருமதி இரத்தின நவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

சகல சமய குருமார்களின் ஆசியுரைகளும், இளங்கலைஞர் மன்ற மாணவர்களின் பண்ணிசையும் இவ்விழாவில்இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வசூலில் பெரும் சாதனை! 8-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா-அசோகன்
மற்றும் பலர் நடித்த
## வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

வெற்றி முழக்கமிடும் 7-வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் விரப்பா-நம்பியார் நடித்த
## மீனவ நண்பன்

**வின்ஸர்** (யாழ்நகர்) இன்று முதல்
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-30
ரவிச்சந்திரன்-எல். விஜயலக்ஷ்மி-மனோகர்
நடித்த
## எதிரிகள் ஜாக்கிரதை
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்
(புதிய பிரதி)

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-விஜயா
**திருடி**

**மு. சபாநாதன்,**
சட்டத்தரணியும்,
நொத்தாரிசும்,
''மகேந்திரம்'',
வட்டுக்கோட்டை.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
அராலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் கைம்பெண் இரத்தினம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்
செல்லத்துரை சக்திதாசன்,
வட்டுக்கோட்டை கிழக்கு,
— மனுதார்.

மரணசாதன நியாதிக்கம் இல: 3502

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1980 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ஆந் நாளன்று முற்பகல் 9-00மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென் பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்

1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10-ஆந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது,
7327

## பிஸ்கால் விற்பனவு

(24 ஸ்ரீ 5259 ''ஸ்கசு'' லொறி)

**மாவட்ட நீதிமன்றம், கொழும்பு**

த. பிரவுன்ஸ் கொம்பனி லிமிட்டெட்,
3-வது மாடி, சிலிங்கோ மாளிகை,
இலக்கம் 69, ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1.

வழக்காளி

வ.ழ. இல். 80722/காசு

விரோதமாக

1. கதிர்காமு சின்னத்துரை, ஆவரங்கால், புத்தூர்.
2. சின்னையா பஞ்சாட்சரம், இல. 361/40, நாகலகம வீதி, கொழும்பு 14.
3. செல்லையா நாகராசா, இலக்கம் 35, மேரி றோட், வம்பலப்பிட்டி.

எதிராளிகள்

இதன்கீழ் விபரித்துச் சொல்லப்படும் 24 ஸ்ரீ 5259 இலக்கம் கொண்ட லொறியை மேற்சொல்லிய முதலாம் எதிரியாகிய புத்தூர் ஆவரங்காலைச் சேர்ந்த கதிர்காமு சின்னத்துரைக்குச் சொந்தமான மேற்குறிக்கப்பட்ட வழக்காளிக்கு சேர்மதியான கீழ் விபரித்துச் சொல்லப்படும் பணத்திற்காக குறித்த வாகனத்தை (லொறியை) 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வளவில் நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

வாகனத்தை வாங்குவோர் கேள்விப்பணம் முழுவதையும் நீதிமன்ற பிஸ்காலிடம் செலுத்தி வாகனத்தை வெளியேற்ற வேண்டும்.

### வழக்காளிக்கு செலுத்த வேண்டிய முழுப்பணம் பின்வருமாறு

(அ) மேற்கூறிய வழக்கு தொடர்ந்து தீர்ப்பு மட்டும் ரூபா 7408/30ம் அதற்குரிய கோட்டு வட்டியும் (ஆ) கூறிய வழக்கின் பணத்தை கட்டி முடிக்கும்மட்டும் ரூபா 222/24 அதற்குரிய கோட்டு வட்டியும். (இ) (1) 24 ஸ்ரீ 5259 இலக்கமுடைய வாகனத்தை திருப்பி வழக்காளிக்கு பொறுப்புகொடுக்கும் மட்டும் அதன் பெறுமதியான தொகை ரூபா 208349/40 கொடுப்பதற்கும் (இ) (2) ரூபா 17415/80 கொடுப்பதற்கும் வழக்கு தொடங்கி முழுப்பணத்தையும் கட்டி முடியும் வரை கோட்டு வட்டியுடன். (இ) (3) மேற்குறிப்பிட்ட வாகனத்தை வழக்காளிக்கு ஒப்பேற்று மட்டும் இல்லாவிட்டால் அதன் முழுப் பெறுமதியை செலுத்தும் வரை 25-3-78 தொடக்கம் ஒரு (1) மாதத்திற்கு ரூபா 3704/15 வீதம்(%) நஷ்டமாக பெற்றுக்கொள்வதற்கும் வழக்குச் செலவு பெற்றுக்கொள்வதற்கும் நியமிக்கப்பட்டுள்ளது. மற்றும் பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவாக்கப்படும்.

**கா. மகேந்திரராசா,**
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்,
80-11-11.
7328

# யாழ். மனோஹரா வெண் திரையில்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்



மக்கள் கலைஞர்
**ஜெய்சங்கர்**
**சீமா**
புன்னகை அரசி
**கே. ஆர். விஜயா**
நாட்டியப் பேரொளி
**பத்மினி**
**வி. கே. ராமசாமி,**
**மனோரமா,**
**விதுபாலா,**
**ரீனா**
அமெரிக்க நடிகர்கள்
**ஜோ ஆலபரட் மார்ஷல்**
மற்றும் பலர் ஜொலிக்கும்

# ஒரே வானம் ஒரே பூமி
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப்படங்களை மிஞ்சும் வகையில் அமைந்த விறுவிறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எந்தப்படத்திலும் காணக்கிடைக்காத பயங்கர சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.

**பாலஸ்தாபனம்** (மட்டுவில்)
கல்வயல் ஸ்ரீ வேதவனப் பிள்ளையார் பாலஸ்தாபன விழாவுடன் மரம் நாட்டுவிழாவும் நடைபெற்றது. இசை அரசு சி. விநாசித்தம்பி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் காலை முதல் நண்பகல் வரை மரம் நாட்டு விழாவும், நண்பகல் விநாயக விக்கிரக பாலஸ்தாபன விழாவும் இடம் பெற்றன. (அ)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சபரிமலை ஸ்ரீஐயப்பன்
(கலர்-புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். —லதா
**உலகம் சுற்றும் வாலிபன்**

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- சௌகார்ஜானகி
**நீதி**
(புதிய பிரதி)

கடைசித் தினம் - 16-11-80
**சாந்தி** யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
**நீ யா?** மகத்தான 17-வது வெற்றி வாரம்!
வெள்ளிவிழா வண்ணச்சித்திரம்

75-வது நாளைநோக்கி வீறுநடைபோடுகிறது
**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
# சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகின்றது!
**விஞ்ஞானப் பயிற்சி 8**
ஆசிரியர்: ஐ. ஜெயநாதன்
(கல்விச்சேவை ஆலோசகர்)
விலை 4-90 V. P. P. உண்டு
விற்பனையாளர்;
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல. 4 A, பஸ்நிலையம்
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7631 வீடு 8076
தந்தி: Books
7334

**ஈழநாடு**
The Eelanaadu 60 சதம்

# தேசிய வருமானத்தில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
கொள்ளமுடிகிறது.

4. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை வெவ்வேறு கால எல்லையில் வைத்து ஒப்ப நோக்கித் தீர்வுகள் மேற்கொள்ள உதவிபுரிகின்றன. இன்னும் மொத்த தேசிய வருமானம் ஆறு (6) சத வீதத்தினால் அதிகரித்தலே பொருத்தமான வளர்ச்சி வீதம் எனப்படுகின்றது.

(5) அரசாங்கம்தனது நாணயக்கொள்கைகளைஒழுங்குபடுத்தும்போது பணச்சுருக்க' பண வீக்க வேளைகளுக்கேற்ப சரியான திட்டங்களைத் திட்டுதற்கும் தேசிய வருமானப் புள்ளி விபரங்களே பேருதவி புரிவனவாகும். இன்றைய காலகட்டத்தில் திட்டங்கள் மூலம் அபிவிருத்திப் பாதையில் தம்மை இட்டுச்செல்கின்ற நாடுகளுக்கே இத் தேசிய வருமானக் கணிப்பீடு சாலவும் பொருந்துவதாகும்.

இவ்விதம் நன்மைகள் புரியும் தேசிய வருமானமானது அபிவிருத்தியையோ அல்லது வளர்ச்சியையோ காட்டும் சரியான குறிகாட்டியாக அமைய முடியாதிருப்பதைப் பின்னைய அத்தியாயங்களில் தெரிந்து கொள்வோம். ஆயினு' தேசிய வருமானக் கணிப்பீட்டினை எவ்விதம் ஏற்கமுடியாதுள்ளது என்பதைச் சிறிது கவனிப்போம். தேசிய வருமானத் தகவல்களைப் பெறுவதிலேயே பேரும் சங்கடங்கள் ஏற்படுகின்றது. உதாரணமாக வருமானங்களைக் கணிப்பீடு செய்வோமெனில் அரச ஊழியர், திணைக்கள ஊழியர் போன்றோரின் வருமானங்களைத் திறைசேரி, திணைக்களங்களுடாயும் பெறமுடியுமானால் விவசாயி, தொழிலாளி, (தனியார்) ஆகியோரின் வருமானப் பதிவுகளைச் சேகரிக்க முடிவதில்லை, அதுமட்டுமன்றி சொந்த வயலில் வேலைசெய்யும் தோட்டக்காரன் தனக்கு உரிய கூலியையும், வீட்டுத் தாய்மார் தம் சேவைகள், கூலியையும் கணிப்பிடுவதே கிடையாது. இவற்றுடன் வரி ஏய்ப்பு நடவடிக்கைகளும், சொத்துப் பாராதீனங்களும் சர்வசாதாரண நடவடிக்கைகளாகும். இன்னும் கால எல்லைக்குப் பிந்திய இயந்திர பாவனைகள், பெறுமான தேய்வு கணிப்பிடலின் அலட்சியம், அரசின் சமூக சேவை நோக்கச் செலவுகள் ஆகியனவெல்லாம் புள்ளி விபரத் தகவல்களைச் சரிவரக் கணிப்பிட முடியாது செய்யவே தேசிய வருமானக் கணிப்பீடும் சரியாக அன்றி ஓரளவு ஒப்பிடற்கே உகந்ததாகின்ற நிலைக்காகின்றது.

செலவு வழியில் கணிப்படும் போது இருப்புக்களின் பெறுமதி மாற்றம் என்பதும் கவனிக்கத்தக்க ஒரு அம்சமாகும். முடிவு நிலைக்குத் தயாராகின்ற உற்பத்திப் பொருட்களுக்கான செலவுகள் காலத்துக்குக் காலம் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் மாற்றப் பெறுமதிகளையும் கூட்டுதல் மூலமே ஓரளவில் சரியான வழியில் தேசிய வருமானத்தினைப் பெற முடிகிறது. செலவு வழியிலான தேசிய வருமான கணிப்பீட்டு முறையினை சுருக்கமாகப் பின் வருமாறு குறியீடு செய்யலாம்.

(காசணி) Y-(C + I) + (X - M) + (V-T) + AINV

Y - தேசிய வருமானம்

C - மொத்த நுகர்வு

I - மொத்த முதலீடு or சேமிப்பு

X - ஏற்றுமதி

M - இறக்குமதி

T - மறைமுகவரி

V - உதவி மானியம்

AINV - இருப்புக்களின் தேறிய மாற்றம்.

இவ்விதம் மூன்று வழிகளிலும் தேசிய வருமானத்தினைக் கணிப்பிட்டபோதும் கிடைக்கும் விடைகள் சமமாகவே காணப்படும் எனினும் எமக்குக் கிடைக்கப்பெறும் தரவுகள் எவ்வழியில் சுலபமாகக் கிடைக்கின்றதோ அவ்வழியில் கணித்துக்கொள்ளலாம்.

# “பசுமை தரும் மரங்கள் நாட்டுக்கு சிறப்பு”

(ஊரெழு)

“வரண்ட நமது பிரதேசத்தை வளமாக்க வேண்டுமானால் பசுமைதரும் மரங்களை நாட்டவேண்டும். மரங்கள் செழிந்து வளர்ந்தால் மழை பெய்யும் பலவிதமான சிறப்புகளும் செல்வமும்கொழிக்கும் பிரதேசமாக அமையும் இளம் மாணவர்களாகிய நீங்கள் இதற்கான பணியில் ஈடுபடவேண்டும்”

இவ்வாறு சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெற்ற மரம் நாட்டும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. ஜி செபநாயகம் கூறினர்.

பாடசாலை அதிபர் திரு. க. செல்லையா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. மு. பாஸ்கரமூர்த்தி உட்படப்பலர் கலந்து கொண்டு பேசினர்கள்.

## காணவில்லை

சிகப்பு நிறமுடைய சிந்து இனப் பசுமாடு ஒன்றைக் காணவில்லை. ஒரு கொம்பு இல்லாத இப்பசுவைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொண்டால் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். மு. சின்னத்துரை, 43/10, கலட்டி அம்மன் கோவிலடி. 7345

அம்பன் கொள்ளை:

# ‘நான்தான் மணியமும்’ கொள்ளைத்தலைவனும் கைது

## 2 துப்பாக்கிகளும் சிக்கின

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப்பகுதியிலுள்ள கொட்டோடை அம்பன் என்னுமிடத்தில் நடைபெற்ற 58 ஆயிரம் ரூபா கொள்ளை தொடர்பாகபொலிசாரால் தேடப்பட்டு வந்த “நான்தான் மணியம்” என்பவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படு கொள்ளையைத் தலைமைதாங்கி நடாத்தியதாகக் கூறம்படும்குடத்தனையைச் சேர்ந்த விநாசித்தம்பி இராசையா, இராசு சின்னத்தம்பி ஆகியோரும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் கொள்ளைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் இரண்டு துப்பாக்கியையும் பொலிசார்கைப்பற்றியுள்ளனர்.

கடந்த செப்டம்பர் மாதம் 15ம் திகதி இரவு கொட்டோடை அம்பன் என்னுமிடத்திலுள்ள நன்னி கதிரன் என்பவரது வீட்டிற்குள் துப்பாக்கிகள், வாள், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் உட்புகுந்த 7 பேர் கொண்ட கொள்ளைக்கோஷ்டி ஒன்று அவ்வீட்டிலிருந்த வயோதிபர்களை ஆயுதமுனையில் பயமுறுத்தி சுமார் 58 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த நகைகளையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மேற்படி கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கரவெட்டி கன்பொல்லையைச் சேர்ந்த சுந்தரம்தேவசகாயம், குடத்தனையைச் சேர்ந்த ஆழ்வான் கந்தசாமி, அளிசாவலையைச் சேர்ந்த மதுரைவீரன் நந்தகுமார் ஆகியோர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு கொள்ளையடிக்கப் பட்டதாகக் கூறப்படும் நகைகள் உட்பட வேறுபொருட்களும் கைப்பற்றப்பட்டன.

இக்கொள்ளை தொடர்பாகத் தேடப்பட்ட மேற்படி கொள்ளையின் சூத்திரதாரி என நம்பப்படும் மாம்பழம் சந்தியைச் சேர்ந்த ‘நான்தான் மணியம்’ என்பவரும், மேற்படி கொள்ளைக்குத் தலைமைதாங்கி நடத்திய குடத்தனையைச் சேர்ந்த விநாசித்தம்பி இராசையா, இராசு சின்னத்தம்பி, உடுப்பிட்டியைச் சேர்ந்த ஜீவன் அல்லது ஜீவா ஆகியோர் பொலிசாரிடம் அகப்படாது டிமிக்கி கொடுத்து வந்தனர்.

‘நான்தான் மணியம்’ என்பவர் யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள வீடொன்றில்மறைந்து வாழ்வதாக யாழ். பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. எஸ். ஜோர்ஜுக்குக் கிடைத்த இரகசியத்தகவலையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த அவர் மேற்படி சந்தேகநபரைக் கைதுசெய்து பருத்தித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்தார்,

பருத்தித்துறைப் பொலிசார் சந்தேக நபரை விசாரணை செய்தபோது வேறொரு கொள்ளை சம்பந்தமான தகவலும் தெரியவந்தது.

பருத்தித்துறைப் பொலிசில் கான்ஸ்டபிளாகக் கடமையாற்றுபவரான திரு மரியநாயகம் என்பவரது தந்தையின் பளையிலுள்ள வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்படும் தாலிக்கொடி ஒன்றையும் ஒருசோடி காடையும் கைப்பற்றியுள்ளனர்.

‘நான்தான் மணியம்’கைது செய்யப்பட்டதையடுத்து அவரது சகாக்களான விநாசித்தம்பி இராசையா, இராசு சின்னத்தம்பி ஆகியோரைப் பருத்தித்துறைப் பொலிசார் கைதுசெய்ததுடன்அவர்களிடமிருந்து கொள்ளைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் லைசென்ஸ் இல்லாத இரண்டு துப்பாக்கிகளையும் பொலிசார் கைப்பற்றினர். இக்கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஜீவா அல்லது ஜீவன் என்பவரைப் பொலிசார் தேடி வருகின்னர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (கொ-அ)

# வண்ணை சிவன் சூரசம்ஹாரம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரர் தேவஸ்தான சூரசம்ஹார உற்சவம் இன்று மாலை நடைபெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் சுவாமி, எழுந்தருளலும் இரவு 7 மணிக்கு சண்முகார்ச்சனையும் நடைபெறும். (ஞ)

# கலவரத்தின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தார். பின் கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்தார். அவர் மது அருந்துவது வழக்கம். அன்று வீட்டில் கொஞ்சம் மது அருந்தினர். பிள்ளைகளுக்கு சாப்பாட்டுச் சாமான்கள் தேவை என்று சொன்னேன். அவற்றை வாங்குவதற்கு வெளிக்கிட்டார். சைக்கிளில் சென்றர். அது அவரது பிரத்தியேகமான சைக்கிள். சைக்கிளின் முன்பக்கத்தில் பிரம்புக்கூடை ஒன்று இருந்தது.

சிகப்புமண் கலரில் சேட்டும், காற்சட்டையும் அணிந்து கொண்டு போனர் வீட்டிற்கு திரும்பி வரவில்லை. அன்று நள்ளிரவு 1 மணிக்கு இன்ஸ்பெக்டர் திருச்சிற்றம்பலம் வந்து தகவல் சொன்னர். ஒரு கலவரத்தில் என் கணவர் இராணுவத்தினரால் சுடப்பட்டு இறந்துவிட்டார் என்று இன்ஸ்பெக்டர் திருச்சிற்றம்பலம் கூறினர்.

(மிகுதி நாளை இதழில் வெளிவரும்.)

# ரயில்வே மந்திரி ராஜினமா

புதுடில்லி, நவ,12

ரயில்வே அமைச்சர் திரு. கமலாபதி திரிபாதி சமர்ப்பித்த ராஜினமாவை ஏற்றுக் கொள்ளுமாறு பிரதமர் தெரிவித்த யோசனையை ரஷ்டிரபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி ஏற்றுச் கொண்டுள்ளார். (கு)

# ஈரானிடம் கையளிப்பு

தெஹ்ரான், நவ 12

அமெரிக்க பணயக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக ஈரானின் நிபந்தனைகளுக்கான அமெரிக்காவின் பதிலை இங்குள்ள அல்ஜீரியத் தூதுவர் ஈரான் அரசிடம் கையளித்தார்.

இதுபற்றிய விபரம் இன்று அல்லது நாளை வெளியிடப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ர)


# கச்சாய் கிராமசபை கேள்வி விளம்பரம்

# குத்தகை விற்பனை - 1981.

1. கொடிகாமம் மத்திய சந்தைக் குத்தகை, வாகனம் நிறுத்தும்காலை, துவிச்சக்கர வண்டிகள் நிறுத்தும் காலை, கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை, கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக் கடை, ஆகியவற்றுக்குரிய கேள்விகள் 01-01-1981 தொடக்கம் 31-12-1981 ஆம் ஆண்டுக்கான குத்தகைக் கேள்விகள் 28-11-80 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் பி. ப. 12-05 க்கு கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் அரக்கு முத்திரை இடப்பட்டு காகித உறையில் இடப்பக்கத்தில் கேள்வி விபரத்தைக் குறித்து இக்காரியாலயத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். ஒரு பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. குத்தகைக்கான கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரப் பணம் பின்வருமாறு.

| | மீளளிக்கப்படும் கேள்விப் பணம் | கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|
| 1. கொடிகாமம் மத்திய சந்தை குத்தகை....1981 | ரூபா 1000-00 | ரூபா 50-00 |
| 2. வாகனம் நிறுத்தும் காலை—1981 | ரூபா 50-00 | ரூபா 10-00 |
| 3. துவிச்சக்கர வண்டி நிறுத்தும் காலை—1981 | ரூபா 50-00 | ரூபா 10-00 |
| 4. கொடிகாமம் ஆட்டிறைச்சிக்கடை —1981 | ரூபா 50-00 | ரூபா 10-00 |
| 5. கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக் கடை —1981 | ரூபா 50.00 | ரூபா 10-00 |

மேற்படி குத்தகைக்குரிய கேள்விப்பத்திரங்கள் எனது காரியாலயத்தில் அதற்குரிய பணத்தைச் செலுத்துமிடத்து 25-11-80ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும். கிடைக்கப்பெறும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரமுண்டு. இக்குத்தகைகள் பற்றிய மேலதிக விபரங்களை கச்சாய் கிராம சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்)
சு. முருகவேள்
விசேட ஆணையாளர்
கச்சாய் கிராமசபைப் பகுதி.

கச்சாய் கிராமாட்சி மன்றம்,
கொடிகாமம்.
1980-11-11


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No QD 8948/78 The Eelanaadu P. B. No 49. Tgrame Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org